
# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008    பதிவு இலக்கம் : 361910

காற்று : 09    சுகந்தம் : 36    (தை - பங்குனி) 2018

வாசகர்களுக்கு
இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல்
நல் வாழ்த்துக்கள்!!!




திருமதி சுந்தரமதி வேதநாயகம்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்
# THENDRAL

44/I, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com
இணையம் :- www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி. கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி. த.செல்வராணி

**ஓவியம்**
வே. ஹோகுலரமணன்

**கணணி வடிவமைப்பு**
யோ. மிருணாளினி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)**

# காப்புறுதி!!!

பாடசாலை மாணவர்களுக்கு **"சுரக்ஷா"** எனும் தொனிப் பொருளில் சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றைக் கல்வியமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி அரச பாடசாலைகள், பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாவில் கல்வி கற்கும் ஐந்து வயது முதல் பத்தொன்பது வரையான சகல மாணவர்களுக்கும் வழங்கப் படுகிறது. எனவே நாடு தழுவிய ரீதியிலுள்ள பதினொராயிரத்து இருநூற்று நாற்பத்து இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த 4.5 மில்லியன் மாணவர்கள் குறித்த காப்புறுதித் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்றனர்.

இதன்படி மாணவர்கள் நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது அதிகூடிய தொகையாக ஒரு இலட்சம் ரூபாவைப் பெறமுடியும். மேலும் மாணவர்கள் திடீரென மரணிக்கும் போது ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அடுத்த கட்டமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கும் **"சுரக்ஷா"** காப்புறுதித் திட்டம் அரசினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பை 2018 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அறிவித்துள்ளது.

இத்திட்டம் முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஏழை, எளிய மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்பது உண்மை.

**என்றென்றும் அன்புடன்**
**-ஆசிரியர்-**


## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 450/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றை பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும்போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

-கட்டுரை-

-வீசுதென்றல் ஆறுமுகம் அரசரெத்தினம், களுதாவளை-



# எந்த விளக்கை ஏற்றுவது?

**தி**ருமுருகாற்றுப்படை நூல் ஆரம்பமாகிறது. சூரியன், சந்திரன், அக்கினி என்பன ஒளியூட்டும் விளக்குகளாகும். இல்லக விளக்கு, பல்லக விளக்கு, சொல்லக விளக்கு, நல்லக விளக்கு என்று தேவாரத்தில் பாடப்பட்டுள்ளது. இருளை நீக்கி ஒளியூட்டுவது **"விளக்கு"**. குத்து விளக்கு, தாள் விளக்கு, தூ ண்டாமணி விளக்கு, தூக்கு விளக்கு, அகல் விளக்கு, சுடர் விளக்கு, ஈகை விளக்கு என்று பல விளக்குகளின் பெயர்கள் அறியப்படுகின்றன. மங்கல விளக்கு, மங்கள விளக்கு என்ற இரண்டு சொற்களும் பிரச்சினைக்கு உட்படுத்தப்படுகின்றன. பல நிகழ்வுகளின் போது **"மங்கல விளக்கேற்றல்"** என்ற சொற்பிரயோகம் பிரயோகப்படுத்தப்படுகின்றது. **"மங்கல விளக்கேற்றல்"** என்பதுவே சரியான பிரயோகம் என வாதிடுவோரும் உளர். இந்த நிலையில் நாம் மங்கல விளக்கையா? அல்லது மங்கள விளக்கையா? ஏற்றுவது. தமிழ் இலக்கிய இலக்கணத்திற்கு ஏற்புடையது என்ற வினாவுக்கு விடைகாண விழைகின்றோம்.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம் களுதாவளையில் நடாத்திய கருத்தாடற் களத்திற்கான அழைப்பிதழ் விஞ்ஞாபனத்தில் **"மங்கல விளக்கேற்றல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்விழாவில் இது பற்றிய சர்ச்சை ஏற்பட்டது. கிழக்கு மாகாணசபை நடாத்திய கலைஞர் கௌரவத்திற்கான விழாவுக்குரிய அழைப்பிதழிலும் **"மங்கல விளக்கேற்றல்"** என அச்சிடப்பட்டிருந்தது. சுவாமி விபுலாநந்தரது பிறப்பின் 125ஆம் ஆண்டு நிறைவையொட்டிய மாநாட்டிற்கான அழைப்பிதழ் விஞ்ஞாபனத்தில் **"மங்கல விளக்கேற்றல்"** என்று அச்சிடப்பட்டுள்ளதைப் பார்த்தவுடன் சந்தோசம் ஏற்பட்டது. இந்த விழாக்களோடும் அழைப்பிதழ்களோடும் தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் தமிழ் அறிஞர்கள் பலரும் கூட்டுச் சேர்ந்திருந்தமையினை அறியமுடிந்தது. தமிழ் ஆர்வம் உள்ளவன் என்றவகையிலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஒரு கைமண்ணளவு கற்றவன் என்ற வகையிலும் (கல்லாதது உலகளவு) நானும் இக்கட்சியினரின் ஆதரவாளன்.

ஐந்தாம் ஆண்டு ஆசிரியர்களுக்கான கல்வி வெளியீட்டுத் திணைக்கள நூலின் 162ஆவது பக்கத்தில் மாதிரி நிகழ்ச்சி நிரல் ஒன்று எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. அதிலே **"மங்கள விளக்கேற்றல்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே சரியான சொற்பிரயோகமென சிலர் வாதிடுகின்றனர். அதேவேளை தரம் 03 இற்கான சைவநெறிப் பாடநூலில் 2016ஆம் ஆண்டின் 17ஆவது பதிப்பில் **"சைவசமயப் பண்பாட்டுக் கருமங்கள்"** என்ற பாடத்தில் 29ஆம் பக்கத்தில் தோரணம் கட்டுவோம் எனும் தலைப்பில் தென்னோலைக் குருத்துப் பின்னிக்கட்டுவது பற்றிக் குறிப்பிடும்போது மங்களகரமான காரியங்களுக்கு குருவியின் தலை மேல்நோக்கி இருக்கும்படியும் இறகுகள் கீழ்நோக்கி இருக்கும் படியும் பின்னுதல் வேண்டும். அமங்கலமான காரியங்களுக்கு குருவியின் தலை கீழ்நோக்கியும் இறகுகள் மேல்நோக்கியும் இருக்கும்படி பின்னிக்கட்டுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **"மங்களம்"** என்ற சொற் பிரிவிலும் பேராசிரியர்கள் பலரும் தமிழ் அறிஞர்கள், வளவாளர்கள் பலரும் ஒன்றிணைந்துள்ளனர். அநேகமான ஆசிரியர்களும் மாணவர்களும் அக்கட்சியின் ஆதரவாளர்களாக உள்ளனர். இவர்களையும் இலகுவாக ஒதுக்கிவிட முடியாது. இது எமக்குச் சங்கடத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. **"சந்தேகக் கோடு சந்தோசக் கேடு"** என்பார்கள். **"தெரிந்தால் கற்பியுங்கள் தெரியாவிட்டால் கற்றுக் கொள்ளுங்கள்"** என்று அரச கருமமொழிகள் அமுலாக்கல் அமைச்சின் அனுசரணையில் நடைபெறும் வானொலி நிகழ்ச்சியொன்று அறிவுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலம், அமங்களம் என்ற இரண்டு சொற்களையும் பயன்படுத்துகின்ற அறிஞர்கள் தகைமையும் தகுதியும் வாய்ந்தவர்கள் என்பதனால் இந்த இரண்டு சொற்களும் சரியானவையா? அல்லது இரண்டும் பிழையானவையா? அல்லது இவற்றுள் எது சரியானது? என்பதை அறிந்து கொள்ளும் அவாவினை இக்கட்டுரை மூலம் எத்திவைக்கின்றேன்.

நேமிநாதம், வீரசோழியம் ஆகிய இலக்கண நூல்களின் 11ஆவது சூத்திரம் **"நேர்ந்த மொழிப் பொருளை நீக்கவரும் நகரஞ் சார்ந்தது உடலாயின் தன்னுடல்போம் சார்ந்ததுதான் ஆவியேல் தன்னாவி முன்னாகும்......."** (நேமி-11) என்றும் **"சொன்ன மொழிப் பொருளை நீக்கு நகரம்..."** (வீர -11) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. சில சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்கள் உருவாக்கப்படும் விதம் பற்றி இவை விளக்குகின்றன.

**பின்வரும் சொற்கூட்டங்களை அவதானிப்போர் மிக இலகுவாக ஓர் உண்மையை விளங்கிக்கொள்ள முடியும்.**

| | | |
|---|---|---|
| காலமரணம் | - | அகாலமரணம் |
| சத்தியம் | - | அசத்தியம் |
| சாத்தியம் | - | அசாத்தியம் |
| சுத்தம் | - | அசுத்தம் |
| சேதனப்பசளை | - | அசேதனப்பசளை |
| சோகம் | - | அசோகம் |
| சைவம் | - | அசைவம் |
| தைரியம் | - | அதைரியம் |
| நாகரிகம் | - | அநாகரிகம் |
| நீதி | - | அநீதி |
| மங்கலம் | - | அமங்கலம் |
| வைதிகம் | - | அவைதிகம் |

என்ற சொற்சோடிகளில் நேர்ந்த மொழிப்பொருளை (சொன்ன மொழிப்பொருளை) நீக்குவதற்கு இச்சொற்களின் முன்னால் **'ந'**கர எழுத்து வந்து அதிலுள்ள **'ந்'** என்ற மெய்யெழுத்து போய்விட **'அ'** என்ற உயிரெழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன.

அங்கன் - அநங்கன்

ஆவசியம் - அநாவசியம்

ஏகம் - அநேகம்

இச்சொற்களில் 'ந'கரத்தின் பின்னால் உள்ள உயிரெழுத்தான 'அ'கரம் மெய்யெழுத்துக்கு முன்னால்மாற எதிர்ச்சொல்லாக மாறியுள்ளதைக் காணலாம். தமிழ் இலக்கணமறிந்தோர் இதனை நன்கு அறிவர். பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலின் 267ஆம் சூத்திரத்தில் தமிழ் மொழியிலுள்ள இயல்பு வழக்கு தகுதி வழக்குச் சொற்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. **"இலக்கணமுடைய திலக்கணப் போலி மரூஉவென்றாகு மூவகை இயல்பும் இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்".** மங்கலம், குழூஉ குறி, இடக்கரடக்கல் ஆகிய மூன்றும் தகுதி வழக்கு. **"மங்கலம்"** என்பதற்கு உரையாசிரியர் பின்வரும் விளக்கம் கூறியுள்ளார். **"மங்கலம்"** என்பது மங்கலமில்லாததை ஒழித்து மங்கலமாகச் சொல்வது. செத்தாரைத் துஞ்சினார் என்றும் ஓலையைத் திருமுகம் என்றும் காராட்டை வெள்ளாடு என்றும் இடுகாட்டை நன்காடு என்றும் வழங்கும். இவை முதலானவை மங்கலம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் **"மங்கலம் என்ப மனைமாட்சி"** என்றார். இளங்கோவடிகள் தனது நூலான சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தில் மங்கல வாழ்த்துப் பாடலில் **"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்.. ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்...."** என்று பாடியுள்ளார். சேக்கிழார் பெருமான் புனிதவதியாரின் திருமணம் பற்றி காரைக்காலம்மையார் புராணத்தில் **"மங்கலமாம் மணவினைகள்"** என்றார். கவிச்சக்கரவர்த்தி கம்பர் மந்தரை சூழ்ச்சிப் படலம் கைகேயி சூழ்வினைப்படலம் என்பவற்றில் **"மங்கலம்"** எனக் கூறியுள்ளார். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் இலங்கை வளம் என்ற பாடலில் **"மங்கலந்திகழ் மாப்பிள்ளைமார்வர"** என்று பாடியுள்ளார். மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா என விநாயகரைப் போற்றுகின்றோம். வாக்கிய பஞ்சாங்கம் **"ஏர் மங்கலம்"** எனக் குறிப்பிடுகின்றது. தாலியோடு பூவும் பொட்டுமாக இருக்கின்ற பெண்ணைச் **"சுமங்கலி"** என்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுங்கலி பூசையும் நடத்துகின்றோம். கணவனை இழந்த கைம்பெண்ணை **"அமங்கலி"** என்று அழைக்கின்றனர். தமிழ்ச் சொற்பொருள் விளக்கம் கூறும் சூடாமணி நிகண்டிலே மங்கலப்பொருள்கள், மங்கலச் சொற்கள் பற்றிக் குறிப்பிடும் போது விளக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மங்கலப் பொருளான விளக்கை மங்கலச் சொல்லால் **"மங்கல விளக்கேற்றல்"** என்று குறிப்பிடும் சொற்பிரயோகமே சாலப் பொருத்தமானதென தெளிவாகின்றது. 2017ஆம் ஆண்டு நடைபெற்ற 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பழமை, பழைமை என்ற சொற்களுள் பழைமை என்பதே சரியான விடையென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நன்னூலின் இறுதிச் சூத்திரமான **"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே"** (நன்-462) என்ற சூத்திரம் இதற்கு ஆதாரமாயிற்று.

**'மங்கல விளக்கேற்றல், மங்கள விளக்கேற்றல் என்ற இரு சொற்றொடர்களையும் பரீட்சை வினாவில் தந்து சரியான விடையைத் தெரிவுசெய்க"**

எனக் கேட்டால் அக்கேள்விக்கு சரியான விடை எதுவென்று மதிப்புக்குரிய தகைமைவாய்ந்த தமிழ் அறிஞர் குழாம் தெளிவுபடுத்தி விடையளிக்க வேண்டுமென்பதும் அதனை அச்சு ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் உலகறியச் செய்ய ஊடகவியலாளர்கள் உதவவேண்டும் என்பதும் எமது பணிவன்பான கோரிக்கை. அதனை செம்மொழியாம் தமிழ் மொழிக்குச் செய்யும் பெரும் பணியாகக் கருதலாம்.

**எமது "தென்றல்" சஞ்சிகையின் 10 ஆவது மலரில் "மங்கலம்" எனும் தலைப்பிலான கட்டுரையிலும் இவ்விடயம் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இது சம்பந்தமாக தகைமை வாய்ந்த தமிழறிஞர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தமது கருத்தை தெரிவித்தால் எமது சஞ்சிகையில் அதனைப் பிரசுரிக்க ஆயத்தமாகவுள்ளோம்.**

**(ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– க.கிருபாகரன் –

# தென்றலின் தேடல்



## திருமதி சுந்தரமதி வேதநாயகம்

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் பிறந்து, தனது தந்தையின் தொழில் காரணமாக வாழைச்சேனையில் 16 ஆண்டுகள் வரை வசித்து, மீண்டும் நாவலடி, டச்பார் நொச்சிமுனையில் வாழ்ந்து வரும் திருமதி சுந்தரமதி வேதநாயகத்தைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமையும், பேருவகையும் அடைகிறது.

## சுருக்க வரலாறு

திருமதி சுந்தரமதி வேதநாயகம் 01.08.1962 ஆம் ஆண்டு தம்பிமுத்து சோமசுந்தரத்துக்கும் - பூரணமதிக்கும் இரண்டாவது மகளாகப் பிறந்தார். இவரது தந்தை வாழைச்சேனைக் காகித ஆலையிலும், தாயார் ஆசிரியையாகவும் பணிபுரிந்தனர். தாயார் கலை, இலக்கியத் துறையில் ஈடுபாடுடையவராவார். இவரது கணவர் ஓய்வு பெற்ற மக்கள் வங்கிப் பாதுகாப்புப் பரிசோதகர். இவருக்கு அமுததர்சினி, அமல்ராஜ், அனுஜா ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர். தனது கலை, இலக்கியப் பணிக்கு உந்துசக்தியாகத் தனது கணவர் செயற்படுவதாகவும் பெருமையோடு **"தென்றலுக்குத்"** தெரிவித்தார்.

## கல்வியும், தொழிலும்

இவர் தனது கல்வியை வாழைச்சேனை, வந்தாறுமூலை, வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு கல்லடி - உப்போடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய - இசை - நாடக - நாட்டிய - கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிவானந்தா தேசிய பாடசாலை ஆகியவற்றில் கற்றார். அதனைத் தொடர்ந்து தனது தொழில் விருத்தியின் பொருட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பட்டமும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமாவும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் முதுமானிப் பட்டமும் பெற்று, மட்டக்களப்பு மாநகரசபை முன்பள்ளி ஆசிரியையாகத் தனது பணியை ஆற்றி வருகிறார்.

## கலை, இலக்கிய ஈடுபாடு
## இவர் பதவி வகித்த சங்கங்கள் / கலை மன்றங்கள்

- ✶ வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனத் தலைவி.
- ✶ பாடசாலை இலக்கிய மன்றத் தலைவி, செயலாளர்.
- ✶ மட்டக்களப்பு திருமறைக் கலாமன்ற நிருவாக சபை உறுப்பினர்.
- ✶ விழுது, ஆற்றல் மேம்பாட்டு மன்ற நிருவாக சபை உறுப்பினர்.
- ✶ வடக்கு - கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத் தலைவி.
- ✶ மட்டக்களப்பு எழுத்தாளர் பேரவைச் செயலாளர்.
- ✶ மட்டக்களப்பு மண்முனை- வடக்கு கலாசாரப் பேரவை நிருவாகக் குழு உறுப்பினர்.
- ✶ நாவலடி மகளிர் சங்கத் தலைவி.
- ✶ நாவலடி மாதர் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர்.
- ✶ கண்ணகை கலை இலக்கிய விழா துணைச் செயலாளர்.
- ✶ மட்டக்களப்பு தமிழ்ச் சங்கச் செயலாளர்.
- ✶ மட்டக்களப்பு பைன் ஆட்ஸ் கழகச் செயலாளர்.
- ✶ அகத்தியர் அறநெறிப் பாடசாலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலியில் களங்கண்ட கவிதைகள்

* 2001 இல் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் ஒலிபரப்பான **"கவிதைக் கலசம்"** நிகழ்ச்சியில் ஒரு மாத காலம் இவரது கவிதைகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

* 2001 இல் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் ஒலிபரப்பான **"சித்திரைப் புத்தாண்டே வருக!"** கவியரங்கில் பங்கு கொண்டார்.

* 2001 இல் சக்தி எவ.எம். இல் அன்னையர் தின சிறப்பு நிகழ்ச்சியில் இவரது கவிதை ஒலிபரப்பானது.

## ஆக்கங்கள் வெளியான சஞ்சிகைகள்

* 2000, 2001 ஆம் ஆண்டுகளில் ஈழநாடு சஞ்சிகையில் **"விடியலை நோக்கி"** எனும் சிறுகதை வெளியானது.

* 2002 ஆம் ஆண்டில் ஈழநாதத்தில் கவிதை பிரசுரமானது.

* 2005 ஆம் ஆண்டில் மண்முனை - வடக்கு கலாசாரப் பேரவை வெளியீடான தேனக மலரில் **"துயர் எழுதுகின்ற பாடல்"** என்ற கவிதை களங்கண்டது.

* அதே ஆண்டில் சுவிஸ் நாட்டின் சிவரஞ்சல் சிறப்பு மலரில் **"நினைத்துப் பார்க்கிறேன், நெஞ்சம் வலிக்கிறது"** – எனும் சுனாமிக் கவிதை களங்கண்டது.

* 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மன்னார் திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்பட்ட சஞ்சிகையில் **"மனிதம்", "உள்ளம்"** எனும் தலைப்பில் கவிதைகள் வெளியாகின.

* **"ஓங்காரானந்தா சரிதம்"** நூலில் **"உடலால் சமாதியாகி, உணர்வால் எம்முடன் வாழும் புனிதர்"** எனும் ஆக்கம் இடம்பெற்றது.

* மண்முனை - வடக்கு பிரதேசசபை சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட சிறப்பு மலரான தேன்சிட்டில் வெளியான கட்டுரை.

* 2012 இல் மண்முனை - வடக்கு கலாசாரப் பேரவை வெளியீடான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனகத்தில் வெளியான **"மரபு மாற்றமும், விளையாட்டுக்களும்"** என்ற கட்டுரை.

* 2013 இல் மழலை இதழில் வெளியான **"உயிர் மெய்"** சிறுகதை.
* 2016 தேனக மலரில் வெளியான **"ஓய்வு"** சிறுகதை.
* இவற்றோடு கவிஞன், கதிரவன் சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் களங்கண்டுள்ளன.

## வெளியிட்ட நூல்கள்

* 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட **"அருள்மிகு ஸ்ரீ கடலாச்சியம்மன் ஆலய வரலாறு"**.
* 2016 இல் வெளியிடப்பட்ட **"மீனுக்குட்டி"**, **"நல்ல நட்பு"**, **"கோழியம்மா"** ஆகிய நூல்கள்.
* 2017 இல் வெளியிடப்பட்ட **"தூக்கணாங் குருவிகள்"** சிறுவர் நூல்.

## நடித்த குறுந் திரைப்படங்கள்


* அம்மா * பாதி * செல்லமே * சின்னான்

## பெற்ற பரிசில்களும், பாராட்டுக்களும்

* **"மாந்திரீக செயல்முறைகள்"** பிரதேச மட்டத்தில் முதலாம் இடமும், மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடமும் பெற்றது.
* தேசிய இலக்கிய விழாவில் **"நல்ல நட்பு"** நூலுக்கு முதலாம் பரிசு கிடைத்தது.
* **"மகத்தானவள் நீ பெண்ணே"** - பாடலாக்கம், **"நாங்கள் சிறுவர்கள்"** - கவிதைப் போட்டிகளில் மூன்றாம் இடம் பெற்றார்.
* அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் இவரது **"உறவுகள்"** நாடகம் பணப்பரிசைப் பெற்றது.
* அரச இலக்கியப் பெருவிழாவில் **"சிட்டுக் குருவிகள்"** சிறுவர் கதை பிரதேச, மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.
* **"தூக்கணாம் குருவிகள்"** சிறுவர் நூலுக்காகப் பிரதேச, மாவட்ட மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறையே முதலாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டார்.

* இவ்வாறாக மழலைகளுக்கு ஆசானாகக் கடமையாற்றுவதோடு, கவிதை, சிறுகதை, நூலாக்கம், நாடகம் எனப் பல்வேறு துறைகளிலும் அதீத ஆற்றலை வெளிக்காட்டும் திருமதி சுந்தரமதி வேதநாயகத்தின் ஆற்றல் மேலும் வெளிப்பட வேண்டுமென இவ்வேளையில் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.

## சந்தாதாரர்களே.......

2018 ஆம் ஆண்டுச் சந்தாப் பணமான ரூபாய் 450.00 ஐ காலதாமதமின்றி அனுப்பித் **"தென்றலின்"** தொடர் வருகைக்கு உதவுங்கள்.

(ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவிதை -

-கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

# தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!!!



சொல் கேளாப்பிள்ளை குலத்துக் கீனம்
சொல் கேட்கும் பிள்ளை குலத்துக்குச் செல்வம்!
கல்மீது எழுத்தாயிதைப் பதித்திட வேண்டும்
கனவிலும் தந்தை சொல்லை அலட்சியம் செய்யாதீர்!
நல்லோராய் மண்ணில் வாழ்ந்திட்டால் போதும்
நாடும் ஊரும் உன்னையே போற்றும்!
எல்லோர் சொல்லையும் நீதான் கேட்டு
ஏமாறாதீர் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!

தந்தை தான் உன்னை வாழ்வினில் என்றும்
தான் கெட்டுப் போக விட்டிட மாட்டார்
விந்தையாய் உன்னை வாழ்வினில் பலர்
வேடிக்கை பேச்சால் வென்றிடுவார்கள்!
மந்தை போல் அதனை கேட்டு நீ வாழ்வில்
மறுகணம் ஏமாந்து போயிடாதே!
தந்தை சொல் கேட்டு நீ வாழ்வினில் உயர்வாய்
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!

ஆயிரம் பேர் உனக்கறிவுரை சொல்லினும்
அனைத்திலும் தந்திரச் சூழ்ச்சிகளிருக்கும்
வாயினால் தந்தை சொல்லிடும் சொல்லில்
வந்திட மாட்டா தந்திரம் சூது
என்னாறாம் வாழ்வில் முன்னேற்றம் காண்பாய்
எப்போதும் தந்தை சொல் தனையேற்று
தன்னலம் பாராது தரணியில் வாழ்வாய்
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேராசிரியர் செ. யோகராசா -

# ஈழத்து நவீன கவிதை வழற்சியின் ஆரம்பகால வரலாற்றில்

## ஈழகேசரிக் - கவிதைகள்

நவீன இலக்கிய வளர்ச்சி என்பது இலக்கிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றுடன் பிணைந்துள்ளதொன்று. ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப் போக்கிலும், இதனை நன்கு அவதானிக்க முடிகின்றது. இவ்விதத்தில் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் **"ஈழகேசரிப் பத்திரிகை"** முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு அதன் ஆரம்ப நிலையில் அது பிரசுரக் களமாக விளங்கியமை நாமறிந்ததே. அதேவேளையில், ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிக்கும் இது கணிசமாகப் பங்காற்றியுள்ளது.

### ஈழகேசரி

ஈழகேசரிப் பத்திரிகை 1939 தொடக்கம் 1958 வரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துள்ளது. காந்தியவாதியும், அரசியல் நாட்டம் கொண்டவருமான நா.பொன்னையா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை 1946 ஆம் ஆண்டில் **"மறுமலர்ச்சி"** சஞ்சிகை முதலியனவும், 1947 இல் சுதந்திரனும் வெளிவரத் தொடங்கும் வரை ஈழத்து எழுத்தாளர்களதும், கவிஞர்களதும் முக்கியமான பிரசுரக் களமாகவும், இளந்தலைமுறையினருக்கான வாசிப்புப் பண்ணையாகவும் கோலோச்சி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஈழகேசரிக் கவிஞர்கள்

இவ் ஈழகேசரியில் கவிதை எழுதியோர் மனுப்புலியார், அகிலேஸ்வரசர்மா, மு.நல்லதம்பி, அல்வையூர் நடராசன் (சத்தியநாதன்), யாழ்ப்பாணன், சோமசுந்தரப்புலவர், வேந்தனார் (பிற்காலத்தில்), மஹாகவி, அ.ந.கந்தசாமி, சாரதா எனப் பலராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழகேசரிக் கவிதைகள்

மேற்கூறிய கவிஞர்களது கவிதைகள் அவர்தம் நோக்கத்திற்கும், காலச் சூழலுக்கும் ஏற்ப பல்வகைப்பட்டிருந்தன.

சமூகச் சீர்திருத்தம் இவர்கள் சிலரது கவிதைகளில் முக்கிய இடம்பெற்றிருந்தது. இவ்விதத்தில் சாதி, மதுபானம் அருந்துதல், கோயில் பலியீடு முதலியன முதன்மை பெற்ற விடயங்களாய் இருந்தன. பின்வருமாறு சத்தியநாதன் எழுதிய சாதிப் பிரச்சினை பற்றிய கவிதையொன்றின் பகுதி. எ-டு:

"தீண்டப்படாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண்டோ?
வேண்டப் படுவதீதோ? - ஐயோ!
வீண் கதை பேசுகிறீர்?
உரிமை உரிமை யென்பீர் - உங்கள்
எளிய சோதரர் தங்கள்
உரிமை உரிமை என்றால் - வேத
ஏடுவிரிப் போமென்பீர்!

சாத்திரங்கள் கற்றீர் - நல்ல
சமயக் கலைகள் கற்றீர்
சூத்திரங்கள் கற்றீர் - போதும்
தூய உண்மை காண்பீர்!

பண்டி தராவீரோ - யன்றிப்
பகுத்தறி வுடையா ராகீர்
நொண்டிக் குழந்தையைத் தூக்க
நூல்விதி பாரென்பதோ?
................................"

சமூக முன்னேற்றம் வேறு சிலரது கவிதைகளின் பொருளாகிறது. பொருளாதார நோக்குச் சார்ந்து குடிசைக் கைத்தொழில், உணவு பயிரிடல் முதலிய விடயங்கள் இவ்விதத்தில் முக்கியம் பெற்றிருந்தன. (எ-டு) :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுப்புலியார் எழுதியவை. **"தேசியம்"** பற்றியும் ஈழகேசரிக் கவிஞர்கள் பாடியுள்ளனர். பின்வரும் பாடல் அல்வையூர் மு.செல்லையாவின் பாடலொன்றின் பகுதியாகும்.

**இலங்காதேவி**

"தேர்ந்திடும் இலங்கா
தேவிநின் வாழ்வு
தினமுங் குறைந்திடுதல்
மைந்தர் செய்யும் தாழ்வு

சார்ந்திடும் சிங்களரும்
தக்கத மிழ்ச் சனமும்
சகோதர நேயம் பெறல்
என்று வரும்?

பாரத நாட்டினைக்
கண்டு பகர் தொண்டு
தீரமுடன் கைக் கொண்டு
திகழுத லென்று?
..........................."

எனினும் இவர்களது **"தேசியம்"** என்பது ஒரு வகையான **"இரட்டைத் தேசியம்"** என்று கூறத்தக்கது. ஏனெனில், இலங்கைத் தேசியம் பற்றிப் பாடிய எமது இலங்கைத் தமிழ்க் கவிஞர்கள் அதற்குச் சமமாக இந்திய/ தமிழகத் தேசியம் பற்றியும் சிலாகித்துப் பாடியுள்ளனர். ஒரு நிலையில் இலங்கைத் தேசியம் பற்றிச் சிந்திப்பவராகவும், இன்னொரு நிலையில் அதற்குச் சமமாக இந்திய/தமிழக தேசியம் பற்றிச் சிந்திப்பவராகவும் காணப்பட்டனர். அவர்களால் ஆறுமுகநாவலரைப் போற்றவும், மகாத்மா காந்தியை வாழ்த்தவும் முடிந்தது. **"ஈழத்தவர் பாரதத்தாயை மறக்கலாமா?"** என்று கேட்கவும் முடிந்தது.

**"ஈழகேசரி"** யில் நவீன பிரபந்தங்களும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் நவாலியூர் நடராஜன் இயற்றிய **"மருதக் கலம்பகம்"** குறிப்பிடத்தக்கது. களனி கங்கைக் கரையோரத்தில்- சேரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற ஏழை மக்கள் பற்றியது. அதன் ஒரு பகுதி :-

**"களனிக்குப் புல்லு வெட்டப் போக வேண்டாம் - மச்சான்**
**காமாட்சி வந்தால் நின்று பார்க்க வேண்டாம்**
**பழனிப் பெரியான் வந்தாற்சேர வேண்டாம் - மச்சான்**
**பாழாகிக் கள்குடித்து மாளவேண்டாம்"**

நாற்பதுகளில் ஈழத்தில் பரிசோதனை நோக்குடன் புதுக்கவிதை முயற்சி இடம்பெறுவதற்கும் ஈழகேசரி வழிவகுத்துள்ளது. (எ- டு)

## ஓர் இரவினிலே

**"இருள்! இருள்! இருள்!**
**இரவிலே நடு ஜாமத்திலே**
**என் கால்கள் தொடும் பூமி தொடங்கி**
**கண் பார்வைக் கெட்டாத மேக மண்டலம் வரை**
**இருள்! இருள்!**
**பார்த்தேன்**
**பேச்சு மூச்சென்று**
**பிணம் போல் கிடந்தது பூமி**
**................................."** -வரதர்-

மேலும் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போன்று, பின்னர் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் முக்கிய இடம்பெற்றுள்ள மஹாகவி, அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், சாரதா முதலியோரின் வளர்ப்புப் பண்ணையாகவும், அவர்கள் வளர்த்த பின்னர் அவர்களது பிரசுர கரங்களிலொன்றாகவும் ஈழகேசரி திகழ்ந்தமை மனங்கொள்ளத்தக்கது.

ஈழகேசரி, பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோர் பாடல்களை மறுபிரசுரம் செய்ததனூடாக, ஈழத்து இலக்கிய ஆர்வலர் மத்தியில் அவர்கள் நன்கறியப்பட வழிவகுத்துள்ளது. குறிப்பாக, பாரதியார் பாடல்களைப் பெருமளவு பிரசுரித்ததனூடாக, ஈழத்தில் பாரதியார் புகழ் பரப்பியதில் ஈழகேசரிக்கு முக்கியமான பங்குள்ளது என்பது பலருமறியாததொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விதத்தில் சமகால ஈழத்துக் கவிஞர்கள் மத்தியில் பாரதியாரின் செல்வாக்குக் கணிசமானது. (எ-டு) :- பாரதியார் கவிதை ஒன்றின் நேரடிச் செல்வாக்கிற்குட்பட்ட கவிதைப் பகுதி இங்கு இடம்பெறுகிறது.

## கொடி தாங்குவோம்

"ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் - இனித் - துஞ்சிடோம்
மாட்சி கொளிலங்கை வாழச் சுதந்திரம்
வாங்குவோம் - கொடி — தாங்குவோம்
........................................" -வேந்தனார்-

## மதிப்பீடு

எவ்வாறாயினும் **"ஈழகேசரி"** யில் வெளியான (வரதர், அ.ந.க,மஹாகவி முதலானோர் தவிர்ந்த பிறர் எழுதிய) மேற்குறிப்பிட்ட கவிதைகள் எவ்வளவு தூரம் நவீன கவிதைகளாக முடியும் - என்றொரு கேள்வி எழுவதற்கு இடமுண்டு. ஈழகேசரியில் வெளியான அனைத்தும் முழுமையான நவீன கவிதைகளன்று. எனினும் இவை நவீன கவிதைக்குரிய சில அம்சங்கள் கொண்டவை என்று கூறுவதில் தவறில்லை.


எவ்வாறாயினும், ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியின் ஆரம்பகால வரலாறு ஈழகேசரிக் கவிதைகளைக் கவனத்திற் கொள்ளாமல், முழுமையடையாது- என்பது தெளிவாகிறது. ஏனெனில், வெவ்வேறு நோக்கும், போக்கும் கொண்ட இரு தலைமுறை சார்ந்த (ஒரு சாரார் பழமையிலும், புதுமையிலும் ஈடுபாடுள்ளவர்; மற்றொரு சாரார் - புதுமையில் மட்டும் ஈடுபாடுள்ளவர்.) கவிஞர்களுக்கு ஈழகேசரி களமமைத்துக் கொடுத்துள்ளமை மறுதலிக்க முடியாததொன்றாகும்.

*எழுத்தாளர்களே! தங்களால் வெளியிடப்படும் நூல்கள், இறுவட்டுக்கள் புதிய வரவுகளில் இடம்பெற வேண்டுமானால், உங்களால் வெளியிடப்பட்ட நூல்கள், இறுவட்டுக்களைத்* **"தென்றலுக்கு"** *அனுப்பி வையுங்கள்.*

(ஆ-ர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



-கவிதை-

– உடப்பூர் வீரசொக்கன் –



# சிறப்புகளைத் தருக!!!

புத்தாண்டே

சீர் பெற்று வருக!

சிறப்புக்களைத் தருக!

துன்பம் படைத்த

ஆண்டை மறந்து

இன்ப கானம்

இசைக்க வருக!

காலகாலமாக ஏங்கும்

சாந்தி, சமாதானம் மலர

சர்வதேச உணர்வு பெருக!


இனிய புத்தாண்டே

நீ வருக! வருக! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-சிறுகதை-



-யோகேஸ்வரி சிவப்பிரகாசம்-

# அந்தக்கணம்

மல்லிகா எதிரேயிருந்த தூணை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். உச்சி வெயில் தகித்துக் கொண்டிருந்தது. இரண்டு, மூன்று நாட்களாக வெயிலென்றோ, இருளென்றோ பாராது, அவளுக்கு ஆறுதல் கூறவென்று வந்திருந்த உற்றமும், சுற்றமும் மெல்ல மெல்லக் குறைந்து இன்று அவள் தனித்து விட்டாள்.

**“அம்மா, அண்ணா.. பம்பரத்தைத் தரமாட்டாராம்”** - என அழுது கொண்டு வந்த வாணி அவள் தனித்து விடவில்லை - என்பதை உணர்த்தினாள். மகன் சத்தியனும், மகள் வாணியும் இனி அவளுடைய பொறுப்பிலே தான் இருக்கப் போகிறார்கள்.

**“சத்தியன் புத்தகத்தை எடுத்துப் படியுங்கோ. வெயிலுக்கை எங்கே சுத்துறீங்க.? நாளைக்குப் பள்ளிக்கூடம் போக வேணுமெல்லோ...”**

ஆம்.. அவர்கள் படிக்க வேண்டும். வளர்ந்து பெரியவர்களாக வேண்டும். இந்தப் பொறுப்பெல்லாம் இனி அவளுடையதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணன் இருந்த வரை குடும்ப பாரத்தை அவளும் இணைந்திழுத்தாலும், பொறுப்பு முழுவதும் தன்னுடையது என்ற மனப்பழு அவளுள் இருக்கவில்லை.

இருபத்திரெண்டு வயதேயான அவளுக்குத் திருமணம் செய்து வைத்து... பாவம் அவர்களும் இப்படி நடக்குமென்று நினைத்திருக்க மாட்டார்கள்.

சரவணன் தானே விரும்பி அவளைத் திருமணம் செய்து தரும்படி கேட்டபோது, அவர்களால் ஒரேயடியாக மறுத்து விடவோ, சம்மதித்து விடவோ முடியாது குளம்பிப் போனது அவளுக்குத் தெரியும்.

நல்ல பிள்ளை வேலை செய்து சம்பாதிக்கிறான். விரும்பி வந்து பெண் கேட்கிறான். முடியாது என்று சொல்ல இருந்த காரணம் - மல்லிகா க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பையாவது படித்து முடித்தால் நல்லதென அவர்கள் கருதியது மட்டுமே. பதினாறு வயது கூட நிரம்பாத நிலையில் ஏன் அவசரப்பட்டு திருமணம் செய்ய வேண்டுமென்ற ஒரு தயக்கம்.

அதற்காக இப்போது மறுத்து விட்டு, எவ்வளவோ மட்டமான மாப்பிள்ளைக்காகக் கூட, தவமிருக்கும் நிலையும் வரலாமென்ற பயமும் அவளுக்கேற்பட்டது.

அம்மா தன் தங்கை சித்திராவுக்காக மாப்பிள்ளை தேடி களைத்தவள். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சித்திராச் சித்திக்கு அவளுடைய முப்பத்தொன்பதாவது வயதில் திருமணம் முடிந்திருந்த நேரம் அது. ஒரு இலட்சம் கல்யாணச் செலவிற்கென்றும், நான்கு இலட்சம் மாப்பிள்ளையின் இரண்டு தங்கைகளுக்கென்றும் கொடுத்தார்கள்.

படிப்பில் திறமைசாலியான அவளுக்குப் படித்து, நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அவள் பாடசாலைக்குப் போய் வந்த போதும் - கோவிலுக்குப் போன போதும் அடிக்கடி எதிர்ப்பட்ட சரவணன் அந்த ஆசையைச் சரணாகதியடைய வைத்து விட்டதால், அவளும் திருமணத்திற்குச் சம்மதித்தாள். சந்தைக்குப் போய் விட்டு வரும் வழியில் ஷெல்லொன்று சரவணனைச் சதைச் சாறாக்கி விடுமென்பது அப்போது எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய திருமண வாழ்வில் ஈழப் போரினால் ஏற்பட்ட துன்ப -துயரங்கள் தான் குறுக்கிட்டனவே தவிர, மற்றும்படி மகிழ்ச்சியான வாழ்க்கைதான். அந்தப் போரே அவனது உயிரைப் பறித்து, ஒரு நிரந்தர வேதனையையும் அவளுக்குக் கொடுத்து விட்டது.

சரவணனின் இந்தத் திடீர் மறைவைத் தாங்க முடியாமல் தவித்தவளுக்கு எப்படிக் குழந்தைகளை வளர்த்து, வாழ்க்கையை நடத்தப் போகிறேன் - என்ற மலைப்பும் சேர்ந்து கூடிய வேதனையைத் தந்தது.

பெற்றோர்கள் உதவுவார்கள்தான். ஆனால் இரு தங்கைகள் படித்து விட்டு, வேலை தேடிக் கொண்டிருந்தார்கள். தம்பியும் படித்துக் கொண்டிருந்தான். இவற்றுடன் அவள் குடும்பத்தையும் பொறுப்பது கஸ்டமானது.

ஏற்கனவே சரவணனின் வருவாயுடன், சேர்ந்து உதவுமே என்ற எண்ணத்தில் வீட்டுத் தேவைகளையும் கருத்திற் கொண்டு, ஒரு மாடும், இரண்டு ஆடுகளும், சில கோழிகளும் வளர்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவற்றின் தொகையைக் கூட்டி அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்து, அதன் மூலம் சிறிது கூடுதல் வருமானம் பெற அவள் முதலாவதாக முயன்றாள். அத்துடன் ஏதாவது வேலை தேடிக் கொள்ளலாமென முயன்றபோது அவளுடைய தடைப்பட்ட கல்வி அதற்குத் தடையாக நின்றது.

அவளுடைய அப்பாவின் உதவியோடு அரையும் - குறையுமாக அவளது வாழ்க்கை ஓடியது. ஆனால் உள்நாட்டு யுத்தத்தின் அகோரம் அவளை இடம்பெயரச் செய்தபோது மீண்டுமொரு முறை பலமான அடி அவள் மேல் விழுந்தது.

சோறு சமைப்பதற்கு வேண்டிய பாத்திரங்களைக் கொண்டு போகவே கஸ்டப்பட்ட நிலையில் சோறு போட்ட ஆடு, மாடு, கோழிகளை எப்படிக் கொண்டு செல்வது? கொட்டும் மழையில் அவளும், பிள்ளைகளும் இருக்கவே இடம் தேடவேண்டிய நிலையில் அவற்றைக் கொண்டு போய் என்ன செய்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையையும் விட்டு விட்டு அவள் பிள்ளைகளுடன் தென்மராட்சிக்கு ஓடினாள். பெற்றோருடன் ஒரு கொட்டிலில் அவள் வாழத் தொடங்கியபோது பணத்தேவை பிடித்தாட்டத் தொடங்கியது.

அலைந்து திரிந்து ஒரு வழியாக கடையொன்றில் வேலை பார்க்கத் தொடங்கி , மூன்று மாதங்களாகு முன் மீண்டும் யுத்தத்தின் அகோரக் கரங்கள் அவளைத் துரத்தின.

வீட்டிற்குத் திரும்பி வந்தாள். விட்டுச் சென்ற பொருட்கள் மட்டுமல்ல, வீட்டின் கூரைகள், கதவுகள், வளர்த்த மரஞ்செடிகள் எதுவுமேயில்லாமல் **"இங்கு வந்து, இவற்றைப் பார்க்காமலே இருந்திருக்கலாமே"** என ஒரு வேதனை.

இதனால் சுயமாகச் சம்பாதிக்கவென்று முதலிட்டு, எதனையும் தொடங்க விரும்பாத தயக்கமும், பயமும் அவளது மனதிலே நிலைகுத்தி விட்டன. வீட்டைத் திருத்தவே பணந்தேவைப்படும் நிலையில் வேறு எதைத் தொடங்குவது என்பது அடுத்த பிரச்சினை.

அவள் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலைகளோ, சிறு கைத்தொழில்களோ தற்போது யாழ். மண்ணில் இல்லை. அங்குமிங்குமாக முளைத்த கடைகளுக்கும் அவளது சேவை தேவைப்படவில்லை.

அரச அலுவலகங்களில் தற்காலிகமாகச் சில நியமனங்கள் நடைபெறப் போவதாக அறிந்து அவள் முயன்றபோது, மீண்டும் அதே கல்வித் தகைமைப் பிரச்சினை.

ஊரிலே பெரியவரான ஜே.பி. சின்னையாவிடம் தனக்கு வேலை ஏதாவது எடுத்துத் தருமாறு மல்லிகா கேட்டிருந்தாள்.

**"ஏதாவது நம்பிக்கை ஒளி தெரியாதா"** - என்ற நப்பாசையுடன் அவரது வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

**"இது பட்டதாரிகளே வேலைக்குப் போட்டியிடுகிற காலம். கடைசி ஓ.எல். எண்டாலும் பாஸ் பண்ணியிருக்க வேணும் பிள்ளை"** என்றார் சின்னையர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பொம்பிளைப் பிள்ளைதானே இப்ப சோதனை எடுத்து சேட்டிபிக்கற் வாங்கி, என்ன செய்யப் போறாள்? மாப்பிள்ளைக்கு கார்த்திகை தொடக்கம் கிரகம் சரியில்லை. ஆவணியில் நாளை வைச்சுப் போடுவம். முற்றாக்கிப் போட்டு இழுத்தடிக்கக் கூடாது".**

அவளது திருமணத்திற்கு நாள் நிச்சயிக்க வந்த கார்த்திகேசரிடம், அவளுடைய அப்பா, மார்கழியில் க.பொ.த(சாதாரணதரம்) பரீட்சை எழுதியதன் பின் திருமணத்தைத் தையிலே நடத்தலாம் - என்று கோரிய போது கார்த்திகேசர் சொன்ன சொற்கள் நினைவிலே கண்ணீராகின்றன.


அந்தக் கணத்தில் நிறுத்தப்பட்ட அவளது கல்வியை இந்தக் கணத்தில் நினைத்துக் கலங்கினாள்.

ஜே.பியர் வீட்டு மேசையிலிருந்த **"உதயன் பத்திரிகை"** கண்ணில் படுகிறது. அதில் வேலைவாய்ப்பு ஏதாவது இருக்குமோ?

**"ஐயா! ஒருக்கால் உதயனைப் பார்க்கட்டே"**
**"தாராளமாகப் பார் பிள்ளை"**

செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், விளம்பரங்களை மேய்ந்த கண்கள் மூலம் ஏமாற்றம் மனத்தினுள் விரவியவேளை க.பொ.த (சாதாரணதரம்) பகல் நேர வகுப்புக்கள் என்ற விளம்பரத்தில் மல்லிகாவின் கண்கள் நின்று நிலைத்தன.

## நகைச் சுவைத் "தென்றல்"



**முனியாண்டி :-** "ஏன் கோசலத்த போத்தல்ல கொண்டு போறீங்க..."

**காத்தமுத்து :-** "நம்ம மாட்டுக்கு Sugar இருக்கா எண்டு Test பண்ணப் போறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படமும் பதிவும்

திருமதி. கவிதா கிருபாகரன்





மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட கவிக்கோ வெல்லவூர்க் கோபால் எழுதிய **"பிரபஞ்சமும் வாழ்வியலும்"** எனும் நூல் 14/11/2017 அன்று மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் எம்.கணேசராஜா தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்ச் சங்கத் தலைவர் எம்.கணேசராஜா நூலின் பிரதிகளை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன் ஆகியோருக்கு வழங்கி வைப்பதைப் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏறாவூர் நகர சபையின் புதிய செயலாளராக பிர்னாஸ் இஸ்மாயில் 16/11/2017 அன்று கடமைகளைப் பொறுப்பேற்பதைப் படத்தில் காணலாம்.



மட்/கல்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா 17/11/2017 அன்று பாடசாலை அதிபர் எஸ்.மோகன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் சாதனை படைத்த மாணவியொருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்/மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் ரி.இளங்கோ தலைமையில் 2/11/2017 அன்று பாடசாலைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தனது சேவைக் காலத்தில் சிறப்பாகப் பணிபுரிந்த ஓய்வுநிலை அதிபர் வ.சொக்கலிங்கத்திற்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்குவதையும், மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருட்பிரகாசம் சாதனை படைத்த மாணவரொருவருக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டக்களப்பு மண்முனை - வடக்கு பிரதேச செயலகமும், கலாசார அதிகார சபை மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய 2017 ஆம் ஆண்டு பிரதேச இலக்கிய விழாவும், **"புதிய மழை"** சிறப்பு மலர் வெளியீடும் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் 10.11.2017 அன்று பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் கே.குணநாதன் **"புதிய மழை"** சிறப்பு மலரினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கப் பொருளாளரும், கொடைவள்ளலுமான வி.றஞ்சிதமூர்த்திக்கு வழங்குவதையும், **"தென்றல்"** சஞ்சிகையின் சிரேஷ்ட எழுத்தாளர் மூ.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) போட்டியில் வெற்றியீட்டிய மாணவியொருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றல்" இன் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி!!!
# புலமைப்பரிசில் பரீட்சை (2017) இல் சித்தி பெற்றோர் விபரம்

## மட்/மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்



விஜயகுமார்
விதுர்ஷன்
புள்ளிகள் – 183



அருளானந்தா
துசாயினி
புள்ளிகள் – 170



டிஸ்க்கரன் டிவுசனன்
புள்ளிகள் – 163



சசிகுமார் ஸஜானா
புள்ளிகள் – 161

## மட்/மட்/அருணோதயம் வித்தியாலயம்



மோகன் மிருஷா
புள்ளிகள் – 163

## மட்/மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்



செந்தில்நாதன்
பிரவீந்த்
புள்ளிகள் – 183




தெய்வநாயகம்
கோபினா
புள்ளிகள் – 159



கோணேசராஜா
ஸிருஷ்ணா
புள்ளிகள் – 157

## மட்/கல்/செங்கலடி மத்திய கல்லூரி



அற்புதராஜா
விஸ்னுஜன்
புள்ளிகள் – 167

## மட்/மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை



சுஜிதரன்
கம்ஷிதா
புள்ளிகள் – 171



ஹரிணி மாதவன்
புள்ளிகள் – 165



ஸ்ருதி பிரியதர்ஷன்
புள்ளிகள் – 163



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது...!!!

**மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி**

**மட்/மட்/கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை**



சகாயபாஸ்கரன்
ஆன்மேரி ஏஞ்சலீனா
புள்ளிகள் – 162



துளசிராஜன்
லுக்ஷாந்த்
புள்ளிகள் – 170



கமலஹாசன்
டக்சன்
புள்ளிகள் – 158



பாலச்சந்திரன்
றனுஷன்
புள்ளிகள் – 156





மட்டக்களப்பு மாவட்ட கலாசார அதிகார சபை மற்றும் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்ட இலக்கிய விழா 12.12.2017 அன்று மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் தலைமையில் மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் கலை, இலக்கியத் துறையில் சிறப்பாகச் செயற்படும் **"தென்றல்"** சஞ்சிகையின் ஆசிரியர் பீட உறுப்பினர் கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளைக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நூல்** :- வலிகள் சுமந்த தேசம்

**ஆசிரியர்** :- கவிஞர் மருதூர் ஜமால்தீன்

**வெளியீடு** :- வாசிப்பு வட்டம், ஏ.கே.எம். வீதி, ஏறாவூர் -03.

**விலை** :- ரூபாய் 100.00

இத்தொகுதியிலுள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் சமூகத்தின் துயர நிலையினைப் பேசுவனவாகவும், அவற்றுக்கான தீர்வுகளை தேடி நிராசையாகிப் போய் ஏக்கப் பெரு வெடிப்பில் குமுறுவனவாகவும் உள்ளன. தான் சார்ந்த சமூகத்தின் பால் கொண்டுள்ள விசுவாசத்தை விரிவாகப் பேசும் ஜமால்தீனின் பேனாவின் வீச்சு வட்டம் விரிவானது... வீரியம்மிக்கது. இவரது கவிதகள் போலித்தனமான பூக்களைப் பூசிக் கொள்ளாமல் போர்க் குணம் கொண்டு பொய்களை பொசுக்கத் துடிப்பனவாகக் காணப்படுவது கண்கூடு.

---




**நூல்** :- மீனுக்குட்டி

**ஆசிரியர்** :- திருமதி சுந்தரமதி வேதநாயகம்

**வெளியீடு** :- பாக்கியம் சிவசோதி பதிப்பகம்

**விலை** :- ரூபாய் 150.00

இவர் மிக நீண்ட காலமாக பாலர்களின் கல்வியில் அதிகூடிய அக்கறை காட்டியவர். இவர் பாலர் பாடசாலை ஆசிரியையாகப் பணிபுரிந்து, பாலர்களின் கல்வி வளர்ச்சியில் தமது அர்ப்பணிப்புடனான சேவையை வெளிப்படுத்தி வருகிறார்.

இவ் "மீனுக்குட்டி" சிறுவர் சிறுகதை முழுக்க முழுக்க சிறுவர்களை மையப்படுத்தி எழுதப்பட்ட சிறுகதை எனக் கூறினால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டுரை -

- அண்ணாவியார் ஆரையூர் அருள் -



# தென்மோடிக் கூத்தில் சிருங்கார இரசனை

ஈழத்திரு நாட்டில் குறிப்பாகக் கிழக்கீழத் தமிழகமான மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்துக்களில் வடமோடி, தென்மோடி ஆகிய இருவகைக் கூத்துக்களுமே முதன்மை பெறுகின்றன – எனக் கூறினால் அது மிகையாகாது. இக்கூத்துக்களிடையே கதைப்பாங்கு (இசை), தாளக்கட்டு (ஆடல்வகை), உடையணியும் முறைகளில் பல்வேறு வகையிலான வேறுபாடுகளை அடையாளம் காணமுடிகிறது. ஈன்று குறிப்பிடும் வகையில் வடமோடிக் கூத்துக்கள் அதிகமாகப் போர் செய்து வெற்றியீட்டுவதிலும் தென்மோடிக் கூத்துக்கள் பெரும்பாலும் காதற் சுவையூட்டி. காதல் நிறைவேறும் வகையிலும் தத்தமது முடிவினைக் கொண்டமைவதைப் பார்க்கலாம்.

வடமோடிக் கூத்துக்களில் வீரம், கோபம், அழுகைச் சுவைகள் மேலோங்கிக் காணப்படுவது போல தென்மோடிக் கூத்துக்களில் நகை, வியப்பு முதலான சுவைகளோடு, காதற் சுவையை அடிப்படையாகக் கொண்ட சிருங்காரம் (சிங்காரம்) எனும் காதல் வயப்பட்ட சுவையினையும் கொண்டு மெய்ப்பாடு விரவி, மேலோங்கி நின்று பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசப்படுத்தி, மெய்மறக்கச் செய்யும் சக்தி கொண்ட செம்பொருள் மலிந்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலக்கிய நடையிலமைந்த மரபுக் கவிதை யாப்பிலக்கணங்களுக்கு உட்பட்ட பாடல்களைக் கொண்டிலங்கும். கூத்தின் தலைவி (குமாரத்தி), தோழி (பாங்கி), தலைவன் (குமாரன்) தலைவிக்கிடையேயும், தலைவன் - தோழர்களுக்கிடையேயும் தென்மோடிக் கூத்தின் சிறப்பம்சங்களுள் ஒன்றான தர்க்கத் தருவில் மிக்க சுவையுடையதாக இச்சிருங்காரத் தருக்கள் வெளிப்பட்டு நிற்றலைக் காணலாம்.

இக்கட்டுரைப் பார்வையானது தென்மோடிக் கூத்துக்களுள் ஒன்றான **"அனுவுருத்திரன்"** எனும் கூத்தில் இடம்பெறுகின்ற சில பாடல்களுக்கூடாக சிருங்கார இரசனை வெளிப்பட்டு நிற்குமாற்றை ஆராய விளைகிறது.

இந்த வகையில் இங்கு நாம் முதலில் அனுருத்திர தென்மோடிக் கூத்தில் வாணன் மகளான வசந்தசுந்தரி (குமாரத்தி) தன் பஞ்சணையில் படுத்துறங்கும் காலை, அவளது நெஞ்சினிக்க துவாரகாபுரி அரசன் மகனான அனுருத்திரனுடன் களவொழுக்கத்தில் ஈடுபட்டது போன்று, கனவு கண்டு, துயில் விட்டெழுந்த சுந்தரி தனது தோழியிடம் தனக்கு இன்பசுகமளித்து, இங்கிதங்கள் செய்த அந்த அரச குமாரனின் சிருங்காரச் செயல்களையும், அவனது இலட்சணங்களையும் பின்வருமாறு இரு பாடல்கள் வாயிலாகக் கேட்டுத் தெளிவுறுவோம்.

தரு

"நன்ன நன்ன நான நன்ன நானா — நன்ன
நான நன்ன நான நன்ன நானா"
"பாங்கியரே நானுரைக்கக் கேளும் - இரவு
தூங்கு மஞ்சம் மீதிலுறங்கும் போது
வாங்குசிலை மதனனைப் போலொருவன் - எந்தன்
வீங்குதனம் பிடித்திடக் கண்டேன்"

"முகத்தோடே முகத்தை வைத்துக் கொஞ்சி - முலை
அகத்தோடே நகத்தை வைத்துக் கெஞ்சி - வெகு
சுகத்தோடே அணைந்தாரடி வஞ்சி - அந்தத்
துரையை விரட்டிங்கிருப்பதினிப் பஞ்சி"

என்றவாறு இவ்விரு பாடல்களிலும் சொல்லணிகளாலும், பொருளணிகளாலும் சொற்சுவை, பொருட்சுவை செறியப் பெற்று சிங்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசனை விரவி நிற்றலைக் காணலாம். இவ்விதத்தில் பாங்கியரே-தூங்குமஞ்சம், வாங்குசிலை, வீங்குதனம், முகத்தோடே, அகத்தோடே, சுகத்தோடே எனும் சீர்கள் முதற்சீர் எதுகைகளாகவும் - இரண்டாவது செய்யுளில் வரும் கொஞ்சி, கெஞ்சி, வஞ்சி, பஞ்சி முதலான சீர்கள் இறுதிச் சீர் எதுகைகளாகவும் வருவதோடு, இவ்விரு பாடல்களிலும் ஒவ்வோர் நான்கடிகளிலும் முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுத்து முற்றுமோனைகளாகவும் வந்து, சொற்சுவை ததும்ப நிற்றலைக் காணலாம்.

அது மட்டுமன்றி, தலைவனின் தோற்றப் பொலிவினைக் கூறவந்த புலவர் **"வாங்கு சிலை மதனனைப் போலொருவன்"** என்றவாறு உவமையணிக்கு ஊடாக தலைவனின் அழகினைக் கற்பிதம் செய்வதைக் காணலாம். இவ்வாறாக சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து, மத்தள ஒலியுடனும், சல்லாரி இசையுடனும், சதங்கைச் சத்த ஆடலுடனும் கேட்கும் போதும், பார்க்கும் போதும் அனைவரது உள்ளங்களிலும் சிருங்காரம் குடிகொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வசந்த சுந்தரியானவள் கனவிலேற்பட்ட கலவிக் களிப்பால் ஏற்பட்ட காதல் பிடிப்பால் உற்ற நோயின் துடிப்பால் ஏற்பட்ட என்ன? என்ன? குணங்குறிகள் என்பதுவும், பெற்றோர்கள் அறிந்தால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், கனவில் கண்ட கண்ணாளனைக் கண்டு பிடித்துத் தந்தால் தோழிக்குத் தரும் பரிசில்கள் பற்றியும், இத்தகைய செயலினைச் செய்யப் போகும் தோழியிடத்து தலைவி கொள்ளும் நன்றிக் கடன் குறித்த தலைவியின் கூற்றாக வருகின்ற பாடல்களிலும் சிருங்காரம் சிறப்புற அமைக்கப்பட்டிருக்கின்றமை பற்றி நோக்குவோம்.

**"சோரருந்தத் தானு மருவருப்பு - எந்தன்
துய்ய கொங்கை இரண்டும் விருவிருப்பு
கூறில் மதிதானெனக்கு நெருப்பு - அவரைக்
கொடுத்தாலென் தோலுனக்குச் செருப்பு"
அன்னன் தந்தையர் அறிந்தாற் கறுப்பு - இதற்
கடுத்த புத்தியாரு முங்கள் பொறுப்பு
அன்னிதங்கள் பண்ணாமலவரை - இப்போ
ஆசையுடன் அணைந்திருக்கத் தருவீர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை மோதிரம் உனக்குத் தருவேன் – நல்ல
மோகன மாலைகளும் தருவேன்
பத்திரமாய் நீரெமக்கு அவரை – இப்போ
பரிவுடனே அணைந்திருக்கத் தருவீர்"

மேற்கூறப்பட்ட செய்யுள்களுக்கூடாக புலவர் எதுகை, மோனைகளை அடிகள் தோறும் பொருத்தமுறக் கையாண்டு சொல்ல வந்த செய்திக்கு அழுத்தம் கொடுப்பதன் ஊடாக சிருங்காரம் வெளிப்பட வழிசமைத்துள்ளதோடு, காதல் வயப்பட்ட சுந்தரி தனது காதலை நிறைவேற்றித் தந்தால், பாங்கியர்க்கு மோதிரம், மாலைகள் தருவேன் என்று சொல்வதற்கப்பால் முத்திரை (மோதிரம்), மோகன (மாலை) என்றவாறு அப்பொருட்களின் தன்மையை மிஞ்ச உயர்த்தி சிருங்கார சுவையோடு கூறுவதும், தலைவியானவள் தனது தோலை பாங்கியர்க்குச் செருப்பாக தைத்துத் தருவேனென்று செய்ய முடியாத ஒன்றைச் செய்வேனென உயர்வுநவிற்சியணிக்கு ஊடாக இயம்புதலானது, காதல் வயப்பட்ட தலைவியின் உள்ளக்கிடக்கையால் வெளிவருகின்ற சிருங்காரத்தின் வெளிப்பாடுகளே எனலாம்.

அடுத்து வசந்தசுந்தரியின் தோழிமார்கள் துவாரகாபுரிக்குச் சென்று, உறக்கத்திலிருந்த அனுருத்திரனிடத்தில் மாயப் பொடியைத் தூவி, அவனை மயக்கமுறச் செய்து, கட்டிலுடன் தூக்கி வந்து, வசந்த சுந்தரியிடம் ஒப்படைக்க, துயில் நீத்தெழுந்த குமாரனிடம் குமாரத்தியானவள் தனது காதலைக் கூற, அதனை மறுத்துரைத்த குமாரனிடம், நீதிமுறைகளை எடுத்தியம்பும் குமாரத்தியின் கூற்றுகளுக்கு ஊடாகவும் சிருங்காரம் வெளிப்படுதலை கீழ் கண்டவாறு நோக்கலாம்.

தரு

"நன்னன்ன நானன்ன நானநன்னா நான நன்னா
நானன்ன நானன்ன நானநன்னா நான நன்னா"

குமாரத்தி தரு

"மன்னர் குமாரனே சொல்லக் கேளும் சொல்லக் கேளும்
மணஞ் செல்தென் னுடணிங்கே இருந்து வாழும் இருந்து வாழும்"

குமாரன் தரு

"கன்னியே நானுன்னைத் திரும்பிப் பாரேன் திரும்பிப் பாரேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளிநீ மறுபேரை விரும்பிச் சேரேன் விரும்பிச் சேரேன்"

குமாரத்தி தரு

"மறுபேரைக் கூடிநான் வாழுமாட்டேன் வாழுமாட்டேன்
மணவாளர் உனை விட்டுப் பிரியமாட்டேன் பிரியமாட்டேன்"

குமாரன் தரு

"உறுதியா யெனைமண வாளனென்றாய் வாளனென்றாய்
உப்போடே கற்பூரம் வருமோ ஒன்றாய் வருமோ ஒன்றாய்"

குமாரத்தி தரு

"பேதகமா யென்னைப் பேச வேண்டாம் பேச வேண்டாம்
பிழை வருமென்று மெய் கூச வேண்டாம் கூச வேண்டாம்"

குமாரன் தரு

"மாதேநீ யாரடி தாசிதானோ தாசிதானோ
மயக்கிட மருந்திடும் வேசிதானோ வேசிதானோ"

குமாரத்தி தரு

"வேசியென் றென்னைநீ ஏச வேண்டாம் ஏச வேண்டாம்
வெறுத்துப் பின் மறுமொழி பேச வேண்டாம் பேச வேண்டாம்"

குமாரன் தரு

"காசினியிலுன்னைப் போலே யாரும் போலே யாரும்
களவெடுப்பார்களோ கருதிப் பாரும் கருதிப் பாரும்"

குமாரத்தி தரு

"ஆண் பிள்ளைக்கிது முறை அல்லக் காணும் அல்லக் காணும்
ஆயிழை மாரோடே அணைய வேணும் அணைய வேணும்"

குமாரன் தரு

"காண்கிலுன் தந்தை தாய் என்னைச் சீறும் என்னைச் சீறும்
காசினியோர் வசை பேசக்கூடும் பேசக்கூடும்"

மேற்கூறப்பட்ட பாடல்களுக்கூடாக தலைவன் - தலைவிக்கிடையிலான உரையாடல்களிலிருந்து நோக்குமிடத்து, தலைவியின் காதலை ஏற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கும் தலைவனிடத்தில் தலைவியானவள் தன் காதலை எடுத்தியம்பும் பாங்கு சிறப்பிற்குரியதாகவும், சிருங்காரச் சுவைமிக்கதாகவும் அமைகிறது. இந்தவகையில் தலைவனானவன் தலைவியிடம் உலகத்திலே உன்னைப் போல திருட்டுத்தனமாக ஓர் ஆணை இவ்விதமாகக் கொண்டு வருபவள் யார் தான் உள்ளாள்? என்பதை நீயே நினைத்துப் பார் எனக்கூற, அதற்குப் பதிலாக தலைவியானவள் இவ்விதமாக ஆண் பிள்ளையாகிய நீ கூறுவது முறையல்ல. பெண்பிள்ளையாகிய என்னுடன் நீ அணைய வேண்டும் என சிருங்காரமாய் இப்பாடல் அமைந்து விடுவது தெளிவாகும்.

இதுகாறும் தென்மோடி நாட்டுக் கூத்தான அனுருத்திரன் எனும் கூத்தில் இடம்பெற்றுள்ள சில பாடல்களை நோக்குங்கால் சிருங்காரச் சுவையானது விரவி நிற்றலைக் காணலாம். தலைவியானவள் தன் கனவிலே கண்ட கண்ணாளன் தொடர்பான விடயங்களை தன் தோழியிடத்துக் கூறும் பாங்கும், தன் காதலை நிறைவேற்றித் தருமாறு தோழியிடத்து இரஞ்சும் விதமும், தன் தலைவனுக்கும் - தனக்கும் இடையிலான உரையாடல்கள் ஈறாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட பாடல்களுக்கூடாக, சிருங்காரச் சுவை ததும்ப வெளிப்படுதலைக் காணலாம். அனுருத்திரன் எனும் கூத்திலே மேற்கூறிய சம்பவங்களைப் போன்ற இதர சம்பவங்களிலும் சிருங்காரச் சுவை இளையோடியிருத்தலைக் கண்டு துய்த்துணரலாம். இக்கூத்தினைப் போன்று ஏனைய தென்மோடிக் கூத்துக்களிலும் சிருங்கார இரசனை பரந்து காணப்படுதலை ஆய்ந்தறியலாம்.

## வாசகர் நெஞ்சம்

**நா**ன் ஐப்பசி – மார்கழி (2017) இதழை மட்டக்களப்பு வாசிகசாலையில் விரித்துப் பார்த்தேன். அன்றைய **“தென்றலுக்கும்”** இன்றைய “தென்றலுக்கும்” நிறையவே வித்தியாசம் தெரிந்தது. ஒவ்வொரு பக்கமும் மிக அழகாக அச்சிடப்பட்டு, வாசகர்களைக் கவரும் வண்ணம் நிறைவாக இருந்தது. பாராட்டுக்கள். தொடருங்கள்– உங்கள் பணியை... ஒரு தமிழ்நாட்டுச் சஞ்சிகையைப் பார்க்கின்ற உணர்வே ஏற்பட்டது.

என்றும் வாசகன்
கவிஞர் செ.குணரத்தினம், அமிர்தகழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

- மதியழகன் சுப்பையா -

# தேடல்!!!



தொலைத்து விடவில்லை
எதையும்
ஆனாலும் தொடர்கிறது
தேடல்கள்
அவசியங்கள் வேண்டித்
தேடுகிறோம்!
நமக்கான தேடுதல்கள்
முடிந்த நிலையில்
தேடுகிறோம் பிறருக்காய்
சொல், பொருள்
இன்ன பிற தேடுகிறோம்!
தேடிக் கொண்டே
இருக்கின்றன உயிர்கள்
உயிரற்றவைகளையும்
தன்னையே தேடுவது
தெய்வீகமாம்!
தேடுகிறார்கள்
பிறரில் என்னையும்
பிறர் என்னிலும்
கிடைத்த பாடில்லை
தொடர்கிறது
தேடல்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்புமணி -



# மட்டக்களப்பு, திருகோணமலை வரலாறு தொடர்பான

## கர்ண பரம்பரைக் கதைகள்!!!

மட்டக்களப்பு வரலாறு பற்றித் தெளிவான ஆய்வு நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. **"மட்டக்களப்பு மான்மியம்"** என்ற ஒரு நூலை காலங்காலமாக மட்டக்களப்பு அறிஞர்கள் வரலாற்று நூலாகக் கருதிப் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். ஆனால் **"மட்டக்களப்பு மான்மியம்"** என்பது **"மட்டக்களப்பின் பூர்வ சரித்திரம்"** என்ற பெயரில் மிக அண்மைக் காலத்தில் (கி.பி.19 ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்ட ஏட்டுப் பிரதியின் நூல் வடிவமாகும்.

இந்த நூலை **"மட்டக்களப்பு மான்மியம்"** என்று பெயரிட்டு, 1950 களில் வித்துவான் FXCநடராசா பதிப்பித்தார். இந்த ஏடு மிகப் பழங்காலத்தில் எழுதப்பட்டது - என்ற நம்பிக்கை அல்லது கற்பிதம் மிக நீண்ட காலமாக இப்பகுதியில் இருந்து வந்தது. ஆனால் இந்த ஏடு செட்டிபாளையத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவரால் மிக அண்மைக் காலத்தில் எழுதப்பட்டது - என்பதை இவரது மருகர் முறையானவரும், தற்போது அமரராகி விட்டவருமான கலாநிதி க.தா.செல்வராசகோபால் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்விபரம் இவரால் எழுதி வெளியிடப்பட்ட **"மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய வரலாற்று அரிச்சுவடுகள்"** எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வரலாறு பற்றி இதுவரை எழுதியவர்கள் தொல்லியல் ஆய்வாளர்களோ, வரலாற்று ஆய்வாளர்களோ அல்லர். அவர்கள் அனைவரும் தமிழறிஞர்கள் மட்டுமே. FXC நடராசா (மட்டக்களப்பு மான்மியம்), பண்டிதர் வி.சி.கந்தையா (மட்டக்களப்பு தமிழகம்), தனபாக்கியம் குணபாலசுந்தரம் (மட்டக்களப்பு மான்மிய ஆய்வு), வித்துவான் சா.இ.கமலநாதன் (மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்மிய ஆராய்ச்சி) இன்னும் இவர்களைப் போன்று மட்டக்களப்பு மான்மியத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதிய அத்தனை பேரும் தமிழறிஞர் மட்டுமே.

## ஆடக சௌந்தரி

"மட்டக்களப்பு மான்மியம்" நூலிலுள்ள சில "கதைகள்" வருமாறு :- ஆடக சௌந்தரி என்பவள் குழந்தையாக இருந்தபோது, ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று ஜோஷியர்கள் சொன்னதைக் கேட்டு அவள் பெற்றோர் (தென்னிந்தியச் சிற்றரசு ஒன்றைச் சேர்ந்தவர்கள்) அக்குழந்தையை ஒரு பேழையில் வைத்துக் கடலில் விட, அப்பேழை தம்பிலுவில்/திருக்கோவில் கடற்கரையில் ஒதுங்க, அக்குழந்தையை அப்போது திருக்கோவிலை ஆட்சி செய்த மன்னன் மனுநேயகயபாகு எடுத்து வளர்த்தான். குழந்தை வளர்ந்து பெரியவளானதும், அவளுக்கு "ஆடக சௌந்தரி" எனப் பெயரிட்டு, தனக்குப் பின் அவளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தானாம்.

இதில் நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில் விடுவதானால், அது நீர், காற்று புகாத பேழையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால், அக்குழந்தை மூச்சுத்திணறி இறந்துவிடும். அல்லது காற்றுப் புகும் வகையில், திறந்த பேழையாக இருந்தால், கடல்நீர் பேழையில் புகுந்து குழந்தையை மூழ்கடித்துவிடும். இது பற்றிய சிந்தனையில்லாதவர்கள் உருவாக்கிய "அம்புலிமாமா" கதையே குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில் விடும் கற்பனைக் கதை. "கர்ணன்" கதையில் குந்திதேவி அவ்வாறு செய்ததாக ஒரு கதை உண்டு அல்லவா? அதன் பிரதிபலிப்பாகவே இத்தகைய கதைகள் உருவாகி இருக்க வேண்டும். இத்தகைய கட்டுக் கதைகள் திரைப்படங்களிலும், சிறுவர் கதைகளிலும் நிறைய வெளிவந்துள்ளன. மட்டக்களப்பு மான்மியத்தை எழுதியவரும் இக்கதையைத் தன் நூலில் புகுத்தியுள்ளார். ஆனால் வரலாறு எழுதுபவர்கள் இது பற்றிச் சிந்திக்காமல் விட்டது ஆச்சரியமே!

## ஆடக சௌந்தரியும், பூதப் படைகளும்

"பூதப் படைகளைக் கொண்டு ஆடக சௌந்தரி கந்தளாய்க் குளத்திற்கு அணை கட்டினாள்" என்று ஒரு கதை "மட்டக்களப்பு மான்மியத்தில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றிருக்கிறது. பூதப் படைகள் என்று ஒன்று இருக்க முடியுமா? **"பூதம்"** என்பது வெறும் கற்பனை. ஆங்கிலத்தில் "Demon" அல்லது "Giant" என்று வருணிக்கப்படும் கற்பனைக் கதை இது. இவற்றைக் கட்டி மேய்த்துச் சமாளிக்க முடியுமா? அல்லது **"அலாவுதீனும் அற்புத விளக்கும்"** கதையில் வரும் பூதம் போன்றவை என்றால் அது கற்பனை என்பது நன்கு தெரிந்த விடயம் அல்லவா?

கந்தளாய்க் குளத்தை மகாசேனன் கட்டினான் என்ற அபத்தமான கதையும் இந்நூலில் இடம்பெறுகிறது. **"மகாசேனன்"** வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டவன். பல இந்து ஆலயங்களை இடித்துத் தள்ளியவன். அப்படிப்பட்டவன் தமிழ் விவசாயிகளின் நன்மைக்காகக் கந்தளாய்க் குளத்தைக் கட்டியிருப்பானா? **"மட்டக்களப்பு மான்மியம்"** எழுதியவர் என்ன அடிப்படையில் இக்கதையைப் புகுத்தினாரோ தெரியவில்லை.

இவ்வாறு **"மட்டக்களப்பு மான்மியத்தில்"** ஏகப்பட்ட குளறுபடிகள் உள்ளன. கால முரண்பாடுகள், பெயர் மாறாட்டம், நம்பமுடியாத சம்பவங்கள் எனப் பல குறைபாடுகள் இதில் உள்ளன. ஏனைய வரலாற்று நூல்களுடன் சரிபார்த்து ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மைகளை மட்டுமே வரலாறு என்ற வகையில் நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அத்தகைய ஓர் ஆய்வுப் பணியை க.தங்கேஸ்வரி செய்துள்ளார். இவர் ஒரு தொல்லியல் பட்டதாரி. களனிப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் சிறப்புப் பட்டம் பெற்றவர். இவர் எழுதிய **"குளக்கோட்டன் வரலாறு"**, **"மாகோன் வரலாறு"** ஆகிய நூல்கள் உண்மையான வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன.

**"குளக்கோட்டன்"** ஆய்வின்போது அவனுடன் சம்பந்தப்பட்ட வேறு சில கர்ண பரம்பரைக் கதை நூல்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். **"கோணேசர் கல்வெட்டு"**, **"தெட்சண கைலாய புராணம்"**, **"யாழ்ப்பாண வைபவமாலை"**, **"கைலாயமாலை"**, **"வையா பாடல்"**, **"திருக்கோணாசல வைபவம்"**, **"திருக்கரைசைப் புராணம்"**, **"திருக்கோணாசலப் புராணம்"**, **"கோணமாமலை அந்தாதி"** முதலியன அவ்வாறான நூல்களுட் சிலவாகும். இந்நூல்களின் சில கற்பிதங்களையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவ்விபரம் வருமாறு :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கோணேசர் கல்வெட்டு - (கி.பி.1400)

**எழுதியவர் - கவிராஜவரோதயர்**

**இந்நூல் கூறும் விபரம்**

இந்நூலில் பின்வரும் விபரங்கள் இடம்பெறுகின்றன. **"குளக்கோட்டன் உன்னரசுகிரியில் (திருக்கோவில்) ஆட்சி புரிந்த ஆடக சௌந்தரியை மணம் புரிந்து, திருகோணமலை முதல் திருக்கோவில் வரை திருப்பணிகள் செய்தான். ஆடக சௌந்தரியின் உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக் கட்டினான். கோணேசர் கோவில் நடைமுறைக்காக வயல்களை நிவந்தமாக வழங்கினான். தென்னிந்தியாவிலிருந்து தொழும்பர்களைத் தருவித்து குடியமர்த்தினான்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் வரும் ஆடக சௌந்தரி திருமணம், திருக்கோவில் வரை திருப்பணி புரிந்தது, ஆடக சௌந்தரியின் உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக் கட்டியது போன்ற குறிப்புகளுக்கு வரலாற்று ஆதாரங்கள் இல்லை.

ஆடக சௌந்தரியின் உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக் கட்டினான்- என்பது அவளுடைய பூதப்படைகள் என்ற மற்றொரு கற்பனையை ஆதாரமாகக் கொண்டே எழுதப்பட்டிருக்க வேண்டும். இத்துடன் இணைந்த வேறு சில கற்பனைகளும் உள்ளன. ஆடக சௌந்தரி குளக்கோட்டன் மேல் படையெடுத்தாள். குளக்கோட்டன் அப்படையெடுப்பை முறியடித்தான். பின்னர் இருவரும் திருமணம் முடித்தனர் - எனும் கதையில் கற்பனை எல்லை மீறிவிட்டதையே இக்குறிப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## 2. தெட்சண கைலாய புராணம் (கி.பி.1400)

**எழுதியவர் :- பண்டிதராசர்**

**இந்நூல் கூறும் விபரம்**

வரராமதேவன் (சோழமன்னன்) மச்சேந்திர புராணத்தில் கூறப்படும் கோணேசர் ஆலயத்தின் பெருமைகளைக் கேள்வியுற்று ஈழம் வந்து திருகோணமலைச் சிகரத்தின் தூபியுடன் கோவில் இயற்றிப் பூசை விழா முதலியன நடாத்தி, திருப்பணிக்குக் கொண்டு வந்த பொன்னைக் கிணற்றில் அடைத்து வைத்து, மகனுக்கு அறிவிக்கும்படி தூது அனுப்பிப் பரகதியடைந்தான். பின் அவன் மகன் குளக்கோட்டன் இலங்கைக்கு வந்து திருப்பணி செய்தான். இது அபத்தமான கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை எவ்வித வரலாற்று ஆதாரங்களும் அற்ற கற்பனைக் கதையாகும். குளக்கோட்டனின் உண்மை வரலாறு வேறுவிதமாக அமைந்துள்ளது.

## 3. திருகோணமலை வைபவம் (கி.பி.1889)

### எழுதியவர்:–வே. அகிலேசபிள்ளை

### இந்நூல் கூறும் விபரம்

சோழ மண்டலத்தில் ஆட்சி செய்த மனுநீதிகண்டசோழன் வம்சத்தவனாகிய வரராமதேவன் திருகோணமலைக்கு வந்து திருப்பணிகள் செய்தான். இவன் திரும்பிச் செல்லும் போது அதிக திரவியங்களைச் சேர்த்து வைத்து விட்டுச் சென்றான்.

பின்னால் இவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். இவனுக்கு நெற்றியில் ஒரு கொம்பு காணப்பட்டது. எனவே இவன் குளக்கோட்டன் என அழைக்கப்பட்டான். இவன் பிற்காலத்தில் தனது தந்தையின் திரவியங்கள் பற்றிய விபரம் அறிந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்தான்.

இஃதிவ்வாறாக கலிங்க தேசத்தில் அசோகசுந்தரன் தம்பதிகளுக்குப் பிறந்த ஒரு குழந்தை சீவி முடிக்க குழலோடும், பற்களோடும் பிறந்தது. சோதிடர் சொற்படி இக்குழந்தை பேழையில் வைக்கப்பட்டுக் கடலில் விடப்பட்டது. இக்குழந்தை உன்னரசுகிரியை (திருக்கோவில்) ஆண்ட மனுநேயகயவாகு மன்னனால் கண்டெடுக்கப்பட்டது. இக்குழந்தை வளர்ந்ததும், ஆடக சௌந்தரி என்னும் பெயருடன் உன்னரசுகிரியில் வளர்ந்தது. ஆடக சௌந்தரியைத் திருமணம் செய்தான். எனவே அவன் திருப்பணி உன்னரசுகிரியிலும் (திருக்கோவில்) இடம்பெற்றது.

இதுவும் **"மட்டக்களப்பு மான்மியத்தை"** ஒட்டிய ஒரு கற்பனைதான். ஆனால் குளக்கோட்டனுக்கு நெற்றியில் கொம்பு வைத்த கதை இந்நூலாசிரியரின் மேலதிக சரடு எனக் கூறலாம்.

## 4. யாழ்ப்பாண வைபவமாலை (கி.பி.1736)

### எழுதியவர் :– மயில்வாகனப் புலவர்

### இந்நூல் கூறும் விபரம்

மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டன் சாலிவாகன சகாப்தம் 358 இல் (கி.பி.436) திருகோணமலைக்கு வந்தான். குளக்கோட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் திருப்பணிகள் செய்து, ஆலயக் கிரியைகள் தடங்கலின்றி, நடைபெறுவதற்காக ஏழு கிராமங்களில் வயல்களை நிவந்தம் அளித்து கணக்கு வழக்குகளை மேற்பார்வை செய்வதற்கு வன்னியர்களையும் குடியமர்த்தி நாடு திரும்பினான்.

## தவறான வரலாற்றுக் குறிப்புக்கள்

திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. ஒன்று தூண் கல்வெட்டு. மற்றது துண்டுக் கல்வெட்டு. அதில் தூண் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:-

பக் (அ) ஸ்ரீ சங்கபோதி பரமரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயபாகுதேவற்கு ஆண்டு பத்தாவதில் தைமாதம் 20 ஆம் திகதி. (ஆ) சிவஞானசங்கரக் கோவிலுக்கு கொடுத்த கொவில இந்து தர்மத்திற்கு அகிதம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்

இக்கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டு வரலாற்று ஆசிரியர்கள் பலர் (ஆ.வேலுப்பிள்ளை உட்பட) திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்கு சிங்கள மன்னன் நிவந்தம் (வொவிலி) அளித்தார் - எனக் கிளிப் பிள்ளைப் பாடம் சொல்லி வந்துள்ளனர். இது ஒரு தவறான விளக்கம் என்பதற்கு அகச் சான்றுகள், புறச் சான்றுகள் பல உள்ளன. சிந்திப்போம்.

1. எந்தக் காலத்திலாவது சிங்கள மன்னர்கள் இந்து ஆலயத்திற்கு நிவந்தம் அளித்துள்ளார்களா?

2. விஜயபாகுதேவற்கு எனும் வசனம் தமிழ் மன்னனையல்லவா குறிக்கிறது.

3. கல்வெட்டு வாசகத்தில் **"இந்து தர்மத்திற்கு அகிதம் விளைப்பவன், கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்"** - உள்ளது. இந்த வாசகம் சிங்கள மரபுக்கு உரியதா? அல்லது தமிழ் மரபுக்கு உரியதா?

மேற்குறித்த குறிப்புக்களை நோக்கினால் இந்த நிவந்தம் தமிழ் மன்னர்களாலேயே வழங்கப்பட்டது - என இலகுவாக ஊகிக்கலாம். அதாவது 10 ஆவது ஆண்டு எனும் நீண்ட கால ஆட்சியும் கவனத்திற் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- கவிஞர் புரட்சிக்கமால் -

# பொங்கிடுக...!!!

**பொ**ங்கல் நாள் இன்று!
பொங்கிடுக, நல்லுணர்வு
சிங்களமும், செந்தமிழும்
சேந்தன்பு சங்கமிக்க!
ஈழமணி நாட்டின்
எழுச்சிக்கு வாழ்ந்திடுக!
நாய் வாலை விருந்து வைக்கும்
பேய்மை கரியட்டும்!
பெரும் பொங்கல் பொங்கிடுக!
வையப் பேருணர்வு
வடிவமுறும் இற்றை நாள்
ஐயா! உம்மை நீர்
அடிவயிற்றுள் புதைக்காதீர்!
வாழி திருநாடு
மாவலியின் மணல் மலிய!
வாழியவே திருநாட்டார்
வாய்மை நிறை பெருக!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மரகதம், மரகதம் எங்க போயிட்டே..."** - என உடல் அலுப்புடன் வந்த கந்தசாமி தனது மனைவியிடம் கேட்டவாறு திண்ணையில் அமர்ந்திருந்தார். உள்ளிருந்த மரகதம் தேனீர் கோப்பையுடன் வெளிப்பட்டாள். தேனீர் கோப்பையைக் கையில் வாங்கியவாறு, **"பிள்ளையள் எங்க மரகதம்"** - என கேள்வியைத் தொடுத்தார். **"பிள்ளையள் உள்ள இருக்குதுகள்"** எனக் கூறியவாறு வாசலில் தேடினாள். **"தம்பி வெளியில போனவன் இன்னும் வரல்ல தேத்தண்ணி ஊத்தி வச்சிருக்கன்"** என்றாள்.




# கானல் நீர்

-நேமிநாதன் டிஹாசி-

கந்தசாமி வாசலைப் பார்த்து விட்டு **"தம்பி வடிவேலு வந்திடுவான் மரகதம். அவனால் தான் நான் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறன். நாலு பெட்டயலையும் கரை சேர்க்க நான் அவனைத்தான் மலைபோல நம்பியிருக்கிறன்"** - என தனது பேச்சை நீட்டிக் கொண்டே சென்றார் கந்தசாமி. இடையில் குறுக்கிட்ட மரகதம் **"அவன் காலையில் பள்ளியில் படிக்கிறான். பின்னேரம் குடும்பத்துக்காக உழைக்கிறான். என் புள்ள இந்தச் சின்ன வயசில எவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறான்"**. - எனத் தனது சோக மழையைப் பொழிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி, மரகதம் தம்பதியினருக்கு வடிவேல் மற்றும் நான்கு புதல்விகளும் உள்ளனர். கந்தசாமி குடும்பத்துக்காக கஷ்டப்பட்டு உழைத்தார். கூலி வேலை செய்தாலும், தனது குடும்பத்தை நன்கு கவனித்துத்தான் வந்தார். ஆனால் துன்பம் அவர்களை அடுத்தடுத்துத் தாக்கியது. கந்தசாமி கஸ்டப்பட்டு மாடாய் உழைத்தது – அவருக்கே வினையாய் முடிந்தது. கந்தசாமி இதய நோயினால் பாதிக்கப்பட்டார்.

கந்தசாமி குடும்பம் நிலை குலைய, ஆரம்பித்தது. உறவினர்கள் மெல்ல மெல்ல விலகினர். வீட்டில் வறுமை குடியேற ஆரம்பித்தது. படிக்கும் பிள்ளைகள், உணவு எனத் தேவைகள் விரிவுபட, வருவோயோ சுருங்கத் தொடங்கியது. அடுப்புப் பூனையின் உறைவிடமாகியது. உயர்தர வர்த்தகப் பிரிவின் விடுகை மாணவனான வடிவேல் தன் குடும்பப் பாரத்தைச் சுமக்க ஆரம்பித்தான். அதற்காக அவன் படிப்பைக் கைவிடவில்லை. ஒரு தோளில் கல்வி, மறுகையில் குடும்பம். எனினும் அவன் துவளவில்லை.

கந்தசாமி குடும்பத்திற்கிருந்த ஒரே ஆதாரம் வடிவேல். அவன் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. தன்னுடன் ஒத்தவர்கள் டியூசன், சினிமா, டீ.வி, ஊர்சுற்றுதல் எனக் களியாட்டங்களில் உழன்ற சமயம் வடிவேலின் மனம் அத்துறைகளில் நாட்டம் கொள்ளவில்லை.

கந்தசாமி மெல்ல மெல்ல தேறத் தொடங்கினார். பின் கூலி வேலைக்குச் சென்றார். ஆனாலும் குடும்ப வரவு - செலவுத் திட்டத்தை சமன் செய்ய முடியவில்லை. அப்பொழுது அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. தன் தங்கைகளையும் கவனிக்கும் வடிவேல் படிப்பில் புலி. மரகதம் தன் மகனால் தான் குடும்பத்துக்கு ஒரு விடியல் உண்டு என எண்ணினாள்.

**"மரகதம் வழியிலே நிமலன் சேரச் சந்திச்சனான். வடிவேல் நல்லாப் படிக்கானாம். இந்த வருஷம் பல்கலைக்கழகத்துக்குப் போவானாம்" -** என மகிழ்ச்சி ததும்ப கந்தசாமி கூறினார். மரகதத்தின் மனம் பூரிப்பால் பெருமிதம் கொண்டது. **"மரகதம் வடிவேல் எங்க போறான்?"** - என்ற கேள்வியுடன் தேனீர்க் கோப்பையை மரகதத்திடம் கொடுத்தார். **"டெஸ்ட் காசு கட்டணுமாம் - எனப் போகிறான். நேற்று கொடுக்க வேண்டிய காசை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இண்டைக்குத்தான் கொண்டு போகிறான்".** சோகத்தின் உச்சஸ்தானியில் கூறினாள்.

வாசலிலே ஏதோ அரவம் கேட்க, அங்கு திரும்பிய கந்தசாமி, செல்லையா வருவதைக் கண்டார். **"எங்க போயிட்டுச் செல்லையா" , "வைத்தியருட்ட கால் வலிக்கு மருந்து எடுத்திட்டு வாரன். உன் புள்ளையும் அங்கதான் நிற்கிறாள்"** எனச் செல்லையா பதிலளித்தார்.

**"அங்க ஏன் நிற்கிறான்?"** - என்ற கேள்வியுடன் விளித்து நின்றான். **"கந்தசாமி உன் வருத்தத்திற்கு மருந்து போடுறனி இல்லையா? உன்ர மருந்து முடிஞ்சுதா? அதுதான் வாங்க வந்தநான் என்று சொன்னான். நிமலன் சேர்ர வீட்ட போறதாகச் சொன்னான்"** - எனப் பதிலளித்த செல்லையா தொடர்ந்தார். **"கந்தசாமி இப்படி ஒரு பிள்ளை கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்"** என்று கூறி விட்டு விடை பெற்றுச் சென்றான். அவர் சொன்ன அந்த வார்த்தை மட்டும் கந்தசாமியின் காதினுள் மீண்டும் - மீண்டும் ஒலித்தது.

மரகதம் சந்தோசத்தில் மிதந்தாள். அவள் மனம் **"சான்றோன் எனக் கேட்ட தாய்" எனத் துள்ளியது. "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்"** எனும் வள்ளுவனின் வாக்குப் பலித்தது. கந்தசாமி குடும்பத்திற்கு வேறென்ன வேண்டும்.

சூரியன் தன் நீண்ட கதிர்களை தன்னுள் அடக்கிக் கொண்டு தன் மறைவைப் பூமிக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது. பறவைகள் தமது இருப்பிடம் நோக்கிச் சிறகடிக்கிறது. இருள் மெல்ல மெல்லப் பூமியைக் கௌவிக் கொண்டிருக்கிறது.

நேரமோ பத்தரை எல்லோர் முகத்திலும் இனம் புரியாத கலவரம். மரம் அசைந்தால் கூட, அனைவர் முகத்திலும் ஒருவித இழையோட்டம். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே. தூரத்தில் ஆங்காங்கே நாய்கள் இருப்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. படலையிலே ஏதோ நிழலாட்டம் தெரிந்தது. அனைவரும் அப்படலையை நோக்கி விரைந்தனர். இடி அவர்களுக்காகவே காத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தை விலக்கிக் கொண்டு சென்ற கந்தையா துவண்டு போனார். கடைசி நிமிடம் வரை அவர் வைத்திருந்த நம்பிக்கை சின்னா பின்னமாகியது. **"இரவு வந்த ஆமிக்காரங்க இருட்டின பிறகு வடிவேல் வந்ததைக் கண்டு சுட்டு விட்டாங்களாம்"**. இரத்தப் பாயில் வடிவேல் உறங்கிக் கொண்டிருந்தான்.




கந்தசாமிக்கு இதயத்தைப் பிளந்தது போல் இருந்தது. வடிவேல் மார்பில் சுடப்பட்டு, வீரத்தமிழ் மகனாய் இறந்து கிடந்தான். அவன் கடைசி நிமிடம் துடித்ததை அவன் கால் போடப்பட்டிருந்த கோலத்தால் உணர முடிந்தது. கந்தசாமி தன் மகனின் கையை மெல்லத் தொட்டார். அதனுள் மருந்துகள் வெளிப்பட்டன. கந்தசாமியின் கண்களிலிருந்து பொல பொலவென நீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. தனக்கும் – தன் குடும்பத்துக்கும் ஆதரவான வேர் வெட்டிச் சாய்க்கப்பட்டதை கந்தசாமியால் தாங்க முடியவில்லை. கந்தசாமி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கொடிய மை போன்ற காரிருளிலும் அவருக்குக் கானல் நீர் தெரிந்தது.


## முகப்பில்...

**கி**ழக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக திருக்கோவில் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான திறன் அபிவிருத்திப் பணியை நிறைவு செய்த யுவதியொருவருக்கு திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் 01.12.2017 அன்று சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறப்பின் பின்பும்....!!!

-கவிஞர் ஏறாவூர் தாஹிர்-

**கோ**வில் தரிசனத்தால்,
கோடி பயன் வருமாம்!
தேவாலயம் சென்றால்,
தேவை நிறைவுறுமாம்!
மசூதிகளில் தொழுதால்,
மனச் சாந்தி ஏற்படுமாம்!
விகாரை வழிபாடு
விக்கினங்கள் நீக்கிடுமாம்!
உள்ளமெனும் பள்ளத்தில்
ஊத்தைகளை நிறைத்து
ஆராதனை புரிந்தால்.....
ஆவதெதுவுமில்லை!
தேவன், கடவுள், அல்லாஹ்,
ஏமாந்தவர்களா என்ன?
சாந்தமே உருவான
புத்தன் புத்தியற்றவனா?
விபுலானந்தரின் பாடல்
விளக்கும் வரிகளைப் போல்.....

உள்ளக் கமலம் தான்
உத்தமனார் வேண்டுவது!
மனிதத்தை வாழ்வியலில்
மரணம் வரை தொடுத்தால்,
மன்றாடும் வேண்டுதல்கள்
கொண்டாடும்படி கிடைக்கும்!
பிறப்புக்கும், இறப்புக்கும்
இடைப்பட்ட வாழ்வியலை
சிறப்பாக்கும் நினைவிருந்தால்.....
இன,மத,மொழி கடந்து,
மனிதரெனச் செயல் புரிந்து,
நல்லவையே நினைந்து
நல்லவை தொடர்ந்தால்.....
இறப்புக்குப் பின்னரும் நம்
சிறப்படையும் பெயர் நிலைக்கும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது என்ன உலகங்கா!!!

– தர்மா –

நேரடி ரிப்போர்ட்

மீன்பாடும் தேனாட்டிலுள்ள மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் பயணிக்கும் இ.போ.ச. பேருந்து வண்டிகள் பயணிகளின் நலனைக் கவனத்திற் கொள்ளாது செயற்படுவதனால், இப்பாதையூடாக காலை வேளையில் பயணிக்கும் **"ஆசான்கள்"** பல்வேறு கஷ்டத்துக்கு உள்ளாவதாக **"இது என்ன உலகங்காவுக்கு"** மனவேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

தமது வீட்டின் தேவைகளை அவசர - அவசரமாக நிறைவு செய்து விட்டு, ஓட்ட -ஓட்டமாக வீதிக்கு வந்தால், பேருந்துச் சாரதிகள் பேருந்துகளை நிறுத்தாது செல்கின்றனராம். இதனால் தாம் குறிப்பிட்ட பாடசாலை அதிபர்களால் பேச்சு வாங்குவதோடு, **"ரெட் லைன்"** கோடு இடப்படுவதாகவும் கவலையோடு முறையிடுகின்றனர்.

அத்தோடு தாம் இ.போ.ச பேருந்துகளில் பயணம் செய்து, தாம் இறங்கிச் செல்லும் இடம் வந்ததும் **"மணி"** அடித்தால் குறிப்பிட்ட பேருந்து நடத்துனர்கள் குறிப்பிட்ட இடத்தில் இறக்காது, ஏளனமாகப் பேசி தூரத்தில் இறக்கியும் விடுகின்றனராம். இத்தகைய நடவடிக்கைகளால் தாம் பெரும் மனஉளச்சலுக்கு ஆளாவதாகவும் அவர்கள் மேலும் முறையிட்டனர்.

இது விடயத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பேருந்து சாலை அதிகாரிகள், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்து, உரிய தீர்வினை வழங்க வேண்டுமெனவும், **"இது என்ன உலகங்கா..."** மூலம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இக்கோரிக்கை நிறைவேற்றப்படுமா? காலம் பதில் சொல்லும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– பழுவூரான் –

# நீத்தார் நினைவு

## ஊடகத் துறையில் சாதனை நிகழ்த்திய

## ஊடகவியலாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம்!!



இலங்கை தமிழ்ப் பத்திரிகை உலகின் மூத்த பத்திரிகையாளர் **"கோபு"** என அழைக்கப்படும் அமரர் எஸ்.எம்.கோபாலரத்தினம் வீரகேசரியில் 1953 ஆம் ஆண்டு ஒப்பு நோக்குனராக இணைந்து கொண்டார்.

அதன் பின்னர் ஆசிரியர் பீடத்தில் ஒரே சமயத்தில் அலுவலக நிருபராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். அதன் பின்னர் ஈழநாடு, ஈழமுரசு, தினக்கதிர், செய்திக்கதிர், ஈழநாதம், சுடரொளி முதலான பத்திரிகைகளிலும் பணியாற்றினார்.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையினரால் 2 மாதகாலம் இவர் சிறை பிடிக்கப்பட்டார். தனது சிறை அனுபவங்களை **"ஜுனியர் விகடனில்" "ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை"** எனும் தலைப்பில் தொடராக எழுதினார்.

அத்தோடு இவர் பத்திரிகைகளில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களை தொகுத்து **"அந்த ஒரு உயிர்தானா உயிர்"** என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறாக பத்திரிகை உலகில் அரை நூற்றாண்டு முடிவில்லாப் பயணத்தை செய்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம். கோபாலரத்தினத்தின் இழப்பு நாட்டுக்கு மட்டுமல்ல; முழு உலகுக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வேளையில் சிரேஷ்ட ஊடகப் போராளி எஸ்.எம். கோபாலரத்தினத்துக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு குறிப்பு

திருமதி. கவிதா கிருபாகரன்

## கூந்தல் பிரச்சினைக்குக் கைகொடுக்கும்

## திராட்சை விதை எண்ணெய்!!!



திராட்சை விதையிலிருந்து எடுக்கப்படுவதுதான் திராட்சை விதை எண்ணையாகும். இதில் அதிகளவு / பேட்டி அசிட் உள்ளன. இது முடியை மிருதுவாக்க உதவுகின்றன.

அத்தோடு தேங்காயெண்ணெய் போல திராட்சை விதை எண்ணெய் குளிர் காலங்களில் உறைந்து விடாது. மேலும் இவ்எண்ணையானது முடிக்கு உயிரூட்டம் தரக் கூடியதாகும்.

### பயன்படுத்துவது எப்படி?

- திராட்சை விதை எண்ணையை நீங்கள் தனியாகவோ, வேறு எண்ணையுடன் கலந்தோ பயன்படுத்தலாம்.
- இந்த எண்ணையை தலையில் இட்டுக் குறைந்தது 2 நிமிடங்களாவது மசாஜ் செய்ய வேண்டும்.
- அரைமணி நேரம் தலையில் ஊற விட்டுத் தலையைக் கழுவி விட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பண்டத்தரிப்பு ஜெசிந்தா ம.வியை வீழ்த்தி**

**தேசிய கபடிப் போட்டியில் பழுகாமம் ம.வி சாதனை!!!**



மட்/பட்/திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலய 17 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியினர் இவ்வாண்டு (2017) நடைபெற்ற தேசிய கபடிப் போட்டியில் முதலிடம் பெற்றுச் தங்கப் பதக்கம் சூடிச் சாதனை படைத்துள்ளனர். இப்போட்டி மொறட்டுவ மைதானத்தில் 04/10/2017 அன்று இடம்பெற்றது.

இறுதிப் போட்டி திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்துக்கும் - பண்டத்தரிப்பு ஜெசிந்தா மகாவித்தியாலயத்திற்கும் இடையில் இடம்பெற்றது. இதில் 30 -23 எனும் புள்ளி அடிப்படையில் கண்டுமணி மகாவித்தியாலயம் வெற்றி பெற்று திருப்பழுகாமம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தது.

இதேவேளை 2016 ஆம் ஆண்டு இவ்வணி வெள்ளிப் பதக்கம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 கேள்வி பதில்

**இல: -05-**

1. உலக முதியோர் தினம் எப்போது?
2. இயற்கையின் உழவன் எது?
3. இலங்கையின் தேசியப் பறவை எது?
4. முள்முருக்கு பூ க்கும் காலம் எப்போது?
5. மனைவியை இழந்து வாழ்பவன்?



## விதிகள்:

01. இப் போட்டியில் சகலரும் பங்கு கொள்ளலாம்.
02. இப்போட்டியில் பங்குபற்றுவோர் கீழ் உள்ள கூப்பனில் விடைகளை எழுதி, நிரப்பி பங்குனி 15 ஆம் திகதிக்கு முன்னர் **"5 கேள்வி – 5 பதில்", "தென்றல்"** 44/1,பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
03. கூப்பன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. வெற்றியாளர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
05. வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 500/= வும், இரண்டாம் பரிசாக 300/=வும், மூன்றாம் பரிசாக 100/=வும் அனுப்பி வைக்கப்படும்.

**5 கேள்வி - பதில்**
**இல- 04 விடைகள்**

1.
2.
3.
4.
5.

பெயர் :- ...................................................................

முகவரி :- ...................................................................

...................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 கேள்வி பதில்

## இல: 04 விடைகள்

1. புறா
2. மஞ்சள்
3. வெந்நீரில்
4. மண்புழு
5. பண்டுகாபயன்

## பரிசில் பெறுவோர்

### முதலாம் இடம்


**வ. மஞ்சு**
பிரதான வீதி,
மண்டூர்.

### இரண்டாம் இடம்

**ப. ரதன்**
பிரதான வீதி,
செங்கலடி.

### மூன்றாம் இடம்

**ப. கீதா**
கூமாங்குளம்,
வவுனியா



## பாராட்டுப் பெறுவோர்

| | | |
|---|---|---|
| 1. | அ.அனிதா | - திருப்பழுகாமம். |
| 2. | க.உமாநந்தினி | - வவுனியா. |
| 3. | ப.அர்ச்சனா | - அக்கரைப்பத்தனை. |
| 4. | க.கீதா | - யாழ்ப்பாணம். |
| 5. | உ.உதயநிலா | - கொம்மாதுறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதியில்....

அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி



## அபிராமி ஜீவல்ஸ்



பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே: 065 -2246944
077 - 6506329

AD/0008

அழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி



## சொர்ணம் நகை மாளிகை

AD/0040

16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860

59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191

# Ladshana Stamp

**-Computer Rubber Stamp Maker-**



Rubber Stamp | Plastic ID Card | Mug, Tile Print | Photo Frame | Certificate/Invitation | Name Board

# 39A, Baily Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 4048, 077 69 155 74.
e-mail: ladshana@gmail.com

AD/0024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org